நல்லூர் இளைஞர் நூலகம் [illegible]

Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை: ரூபா 6-00


# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி


நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆவணி 04    [20-08-1993]    வெள்ளிக்கிழமை    ஓசை 183

## இரத்த அழுத்தம் - விரல்ரேகை தொடர்புண்டு என்கிறது ஆய்வு

மனிதர்களின் கைரேகைகளுக்கும் உயர் இரத்த அழுத்தத்திற்கும் இடையில் தொடர்பு இருப்பதாக அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. ஆண்கள், பெண்கள் என 139 பேரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து உண்மை வெளிவந்துள்ளதாக பிரிட்டிஷ் மருத்துவ சஞ்சிகையில் டாக்டர் ஜெய்த் கொட்பிரே எனும் லண்டன் வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார் கருளான வடிவங்கள் உடைய விரல் ரேகைகளையும் நீளமான உள்ளங் கைகளையும் கொண்டவர்கள் உயர் இரத்த அழுத்தத்திற்கு உள்ளாகும் சாத்தியங்கள் அதிகம் என இவர் கூறுகிறார். ஒருவரின் குருதி விநியோகப் பாதையில் ஏற்படும் சிறிய மாற்றம் உடலின் வெளிப்புறத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது இதில்கையில்உள்ள ரேகைகள் குறிப்பிடத்தக்கவையாகும் என டாக்டர் ஜெய்த் கொட்பிரே மேலும்தெரிவித்தார்.



தமிழீழ நீதித்துறையின் நீதியாளர் தேசியத் தலைவர் பிரபாகரனின் முன் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதை முதலாவது படத்திலும், சட்டவாளர் சத்தியப் பிரமாணம் செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா அவர்களும் அருகில் காணப்படுகிறார்.



# நேர்மையுடன், சத்தியத்தின் அடிப்படையில் சமூகநீதி நிலைநாட்டப்பட்டாக வேண்டும்


## படையில் மீண்டும் சேருமாறு ஹமில்டனும் அழைப்பு

இராணுவத்தைவிட்டு தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் வந்து சேருமாறும் அவர்களுக்கு தண்டனை எதுவும் வழங்கப்படமாட்டாது எனவு' கூட்டுப்படைத் தலைமையகத்தளபதி ஜெனரல் ஹமில்டன்வசிங்கவும் அறிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர்

யில் இராணுவத்திற்கு ஆள் திரட்ட நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் எதிர்பார்த்த அளவு ஆட்களை திரட்ட முடியாமற்போனதையடுத்தே இராணுவ அதிகாரிகள் இவ்வாறு கோரிக்கைகள் விடுவதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## வீரச்சாவு



## நீதியாளர் சத்தியப்பிரமாண வைபவத்தில் தேசியத் தலைவர் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

"தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்த பாச உறவுகளுக்கும் இடமளியாது, நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இலட்சியப் போராளிகளாகிய உங்களிடமிருந்து தமக்கு நீதியும் நியாயமும்

# சமூகநீதி நிலைநாட்டப்பட்டாக வேண்டும்

## படையில் மீண்டும் சேருமாறு ஹமில்டனும் அழைப்பு

இராணுவத்தைவிட்டு தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் வந்து சேருமாறும் அவர்களுக்கு தண்டனை எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் கூட்டுப்படைத் தலைமையகத்தளபதி ஜெனரல் ஹமில்டன்வலசிங்கவும் அறிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இத்தகையதொரு கோரிக்கையை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணவும் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் இராணுவத்திற்கு ஆள்திரட்ட நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் எதிர்பார்த்த அளவு ஆட்களை திரட்ட முடியாமற்போனதையடுத்தே இராணுவ அதிகாரிகள் இவ்வாறு கோரிக்கைகள் விடுவதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களில் சுமார் மூவாயிரம் பேர்வரை தலைமறைவாக திரிவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீரச்சாவு



லெப். ரட்ணம்

பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற நேரடி மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டின

(6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் சேர 5ஆம் வகுப்புக்கல்வி போதும்

### ஆட்சேர்ப்பு பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. 21 நிலையங்களில் இந்த ஆடசேர்ப்பு நிகழும். ஐந்தாம் வகுப்பில் சித்தி குறைந்தளவு கல்வித்தகைமையாக கருதப்படும் என இராணுவ ஆட்சேர்ப்பு பிரிவு அறிவித்துள்ளது.

முன்னர் இராணுவ ஆட்சேர்ப்பிற்கு குறைந்தளவு கல்வித் தகைமையாக க.பொ.த சாதாரணதரம் எதிர்பார்க்கப்பட்டதும் பின்னர் அது எட்டாம் வகுப்பு சித்தியாக குறைக்கப்பட்டதும் நினைவிருக்கலாம். தற்போது இந்த கல்வித்தகைமை ஐந்தாம் வகுப்பாக குறைக்கப்பட்டுள்ளமை இராணுவ ஆட்சேர்ப்பிற்கு சிங்கள இளைஞர்கள் அவ்வளவு ஆர்வம் காட்டாததே காரணம் என சுட்டிக்காட்டப்படுகிறது

வங்காலை, தள்ளாடி

## இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன

(கொழும்பு)

மன்னாரில் இராணுவம் 20 மைல் சதுரபரப்பிலிருந்து பின்வாங்கிச் சென்றுவிட்டதையடுத்து இப்பகுதிகளில் படையினருடன் இணைந்து கடமையாற்றிய ரெலோ குழுவும் மன்னார் தீவுக்கு சென்றுவிட்டன.

இதேசமயம் மன்னாரின் பெரும் பகுதிகளிலிருந்து வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

மண்கிண்டி மலை

# இராணுவ முகாம் அழிப்பு படையின் மீது நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த மாதம் 25ஆம்திகதி வெலிஓயா ஜனகபுர இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டமைக்கு காரணம் அப்பகுதிக்கு பொறுப்பான படையினரின் கவனக் குறைவும் போதிய மேற்பார்வையின்மையுமேஎன இராணுவ விசாரணை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் பாதுகாப்பு தொடர்பான செயற்பாட்டு நடைமுறைகளும், இராணுவத்தலைமையகத்தினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளும் இங்கு மீறப்பட்டதாகவும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன குறிப்பிட்டார்.

இம்முகாம் அழிக்கப்பட்டது தொடர்பாக விசாரணைகளை இராணுவத் தளபதியின் பணிப்பின் பேரில் மேஜர்ஜெனரல் ஜெரிடிசில்வா தலைமையிலான இராணுவக்குழு மேற்கொண்டமை தெரிந்ததே.

# நீதியாளர் சத்தியப்பிரமாண வைபவத்தில் தேசியத் தலைவர் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

**"தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்த பாச உறவுகளுக்கும் இடமளியாது, நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இலட்சியப் போராளிகளாகிய உங்களிடமிருந்து தமக்கு நீதியும் நியாயமும் கிடைக்குமென மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயற்பட்டு சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்"**

இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமிழீழ நீதித்துறையின் நீதியாளர், சட்டவாளர் ஆகியோரின் சத்தியப்பிரமாண வைபவத்தில் உரையாற்றும் போது எடுத்துரைத்தார். தமிழீழ சட்டக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக்கொண்ட நீதியாளர்களும் சட்டவாளர்களும் நேற்று தலைவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த வைபவத்தில் தேசியத் தலைவர் கருத்துரை வழங்கும் போது மேலும் கூறியதாவது:

"இன்றையதினம் எமது இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினமாகும். இன்றைய தினத்தில் தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடப்பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்த சத்தியப்பிரமாண வைபவம் நடைபெற்றிருக்கிறது. முன்பு பஞ்சாயத்து முறையில் கிராமிய இணக்கசபைகளை நிறுவி மக்களின் பிணக்குகளைத் தீர்த்துவைக்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சிபெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டி எழுப்பப்படுகிறது. ஒரு சுதந்திரம்பெற்ற, இறைமையுடைய நாட்டின் அரச நிர்வாக அலகு போல எமது நீதித்துறை உருவாக்கப்படுகிறது. இது எமது போராட்டத்தின் பாரிய வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

நீங்கள் போராளிகளாக இருந்து நீதியாளர்களாக மாறியிருக்கிறீர்கள். எந்த இலட்சியப் பற்றுடன் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டீர்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## இரு குண்டுவீச்சு விமானங்கள் புதுக்குடியிருப்பில் தாக்குதல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் இரு குண்டுவீச்சு விமானங்கள் அகோர குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்றுக் காலை 5. 45 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதியை திடீரென வட்டமிட்ட இரு குண்டுவீச்சு விமானங்கள் அடுத்தடுத்து எட்டுக் குண்டுகளை வீசின.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

காரைநகர், மாதகல்

## படையினர்மீது புலிகள் எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், மாதகல் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மீது இரவுவேளை விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு11 மணியளவில் மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்மீது எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணியளவில் காரைநகர் இராணுவத்தினர் மீது எறிகணைத் தாக்குதல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வு அரசின் பொறுப்பாகும்

### சுதந்திரக்கட்சி எம். பி.

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது அரசின் பொறுப்பாகும் என சுதந்திரக்கட்சி உறுப்பினர் கே. பி. ரட்நாயக்கா நேற்று தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று அவசரகால சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என உபாலி அமரசிறி என்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

## கொழும்பில் இயங்க ஈ. பி. டி. பிக்கு அனுமதி

(கொழும்பு)

கொழும்பில் இயங்க தடை விதிக்கப்பட்ட ஈ. பி. டி. பி. குழு மீண்டும் தலைநகரில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக் குழுவினர் மீண்டும் கொழும்புப் பகுதியில் தமிழ் இளைஞர்களை கைதுசெய்வதிலும்விசாரணை நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்டபின்னர் இக் குழுவினர் கொழும்பில் ஆயுதங்களுடன் நடமாட தடை விதிக்கப்பட்டதோடு அவர்கள் திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது. இக் குழுவினர் கொழும்பில் நடமாடுவது குறித்து எதிரணியினர் அப்போது ஆட்சேபித்ததை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரிந்ததே.

## ராணுவத்தீர்வின் மூலம் பிரச்சினை தீர்க்க முடியாது

### பி. பி. ஸிக்கு அரச அதிபர் பேட்டி

இராணுவத் தீர்வு மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணமுடியாது காணவும் இயலாது. இது ஓர் அரசியல் பிரச்சினையாக இருப்பதால் ஓர் புரிந்துணர்வுடன் அணுகுவதன் மூலமே இனப்பிரச்சினையை ஒரு முடிவிற்கு கொண்டுவர முடியும் என யாழ். அரசாங்க அதிபர் திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ருகுணுவில் மண்ணெய்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'ருகுணு' கப்பலில் மூவாயிரம் மண்ணெய் பரல்கள் இன்று எடுத்துவரப்படும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**SPECIAL ENGLISH CLASSES**

Spoken with grammar and O/L Yr 10 English classes are conducted by a leading teacher Contact — Director, SHAMROCK Academy. Chundikuly Jaffna (5721)

### தேவை

சரசாலை கலைமகள் கல்வி நிலையத்திற்கு எழுது வினைஞர் தேவை. விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் உங்கள் விண்ணப்பங்களை கலைமகள் கல்வி நிலையம் சரசாலை எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது கடிதம் மூலமோ 10-9-93இற்கு முன் அனுப்பி வைக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (5714)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இங்கிலாந்து தயாரிப்பு Oteley) Single demy Cylinder Machine விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு இல. 198, மே/பா. ஈழநாதம், 31மகேந்திரா வீதி. யாழ்ப்பாணம். 5713

### மில்க்வைற் சோப்

மில்க்வைற் நீலசோப் மீண்டும் கிடைக்கிறது. கட்டி ஒன்று ரூபா 7 50 மட்டுமே. தண்டு (பேப்) சோப் ஒன்று ரூபா 3 50 மொத்தக் கொள்வனவிற்குக் கவர்ச்சியான கழிவுண்டு. மேலுறைகளைச் சேகரித்து அன்பளிப்புப் பெறுங்கள். 'மில்க்வைற்' (சி-7218)

### இரண்டாவது பதிப்பு வெளிவராது!

இதுவரை வெளிவந்த இருபத்திரண்டு மீரா பிரசுரமான நாவல்களில் இன்னும் "பத்து மீரா பிரசுர நாவல்கள்" மட்டுமே விற்பனைக்குண்டு. பல்லாயிரக் கணக்கானவர்கள் படித்து மகிழ்ந்த மீரா பிரசுர நாவல்களை நீங்களும் படித்துப் பாருங்கள்! (5672

### ஜோதிட விஞ்ஞானம்

கைரேகை சாஸ்திரம், ருது ஜாதகம், எண்சோதிடம், விவாகப் பொருத்தங்கள் ஜனன கால ஜாதகங்கள் விஞ்ஞான ரீதியாக கணிப்பதற்கும், பார்வையிடுவதற்கும் நேரிலே சந்திக்கலாம். "சத்யா" Prof T. சத்தியதாஸன் (இடிகுண்டருகாமை, கட்டுடை (5729)

### "திருவள்ளுவர் படம்"

தமிழ்மறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவரின் மூவர்ணப்படம் ஒவ்வொரு வீட்டிலும், பாடசாலையிலும், வாசிகசாலையிலும் இருப்பது அவசியம் மில்க்வைற் நீல சோப் மேலுறை 25 தந்து அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் [சி/7222)

### சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள்

வியாபார நிலையங்களுக்கு பிள்ளைகளுக்கு, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க விவாகப் பொருத்தம் பார்க்க ஜாதகம் எழுதுவிக்க உங்கள் எதிர்காலம் பற்றி அறிய வேலணை ஜோதிடர் V A சிவராசா. 152B. அரசடி றோட், கந்தர் மடம். (5730)

### பிரத்தியேக வகுப்பு

G C E A/L 94—95 தமிழ், இந்து நாகரிகம், சனி, ஞாயிறு 10—12 பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன இந்து நாகரிகம் 94 (விரைவிடை வகுப்பு) ஆரம்பம் 21-08-1993 காலை 10 மணி ஆசிரியர் திரு. தாஸ் சுரேன் கல்வி நிலையம் (எழிலகம் அருகாமை) யாழ்ப்பாணம் 5734)

### நன்றி தெரிவிப்பு

நல்லூர்க் கந்தன்ரதோற்சவ தினத்தன்று என்னால் தவறவிடப்பட்ட மோதிரத்தை கண்டெடுத்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தமுருகனடியாருக்கும் அதனை என்னிடம் ஒப்படைத்த தமிழீழ காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ந. சிருபாகரன், 95/14 ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை (5733)

### விற்பனைக்கு உண்டு

கமராக்கள் OM IOM 2. Fx 7 பில்லர் லென்ஸ் சூம் லென்ஸ்கள் விற்பனைக்கு உண்டு. சேனசன்ஸ் இல. 10 செட்டித்தெரு, நல்லூர் யாழ்ப்பாணம். (5714(

### ஷெல் வீச்சு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 4 00 மணியளவில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட இவ் எறிகணைகள் அளவெட்டி, ஏழாலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

## யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

### ஸ்தாபகம் - 1868

"Lighted to give Light" - மகுட வாசகம்

மேற்படி கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கு முகமாகவும், கடந்து சென்ற காலத்தின் நினைவுப் பெட்டகமாகவும், மலரொன்றை வெளியிட இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது. இம் மலர் காத்திரமான வரலாற்றுப் பொக்கிஷமாகத் திகழ இக்கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வேண்டுகின்றோம். இவர்களிடமிருந்து இக்கல்லூரியின் வரலாறு, அதன் சாதனைகள், இக் கல்லூரியின் வாழ்வுக்கும் வளத்துக்கும் தம்மை அர்ப்பணமாக்கியவர்கள், இங்கு பெற்றுக் கொண்ட மறக்க முடியாத அனுபவங்கள் தொடர்பான ஆக்கங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எதிர்பார்க்கிறோம்.

இம்மலர் வெளியீட்டை யொட்டி பின்வரும் போட்டிகளும் இடம் பெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

1. அட்டைப்பட ஓவியப் போட்டி:
   (அ) 25 C M × 20 C M அளவான அட்டைக்குரிய ஓவியம்.
   (ஆ) மலர் வெளியீட்டின் நோக்கினை துல்லியமாக்குவதாக இவ் ஓவியம் அமைதல் வேண்டும்.
2. திருமதி இ மதியாபரணம் நினைவுப் பரிசிலுக்

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

ஜனசக்தி இலவச பாலர் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக ஜனசக்தி சனசமூக நிலையத்தால் 18 08 93 அன்று நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்ற எண்களின் விபரம்.

| 1ஆம் பரிசு:- | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|
| 2329 | 3451 | 4843 |

ஆறுதல் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 25-6 | 4343 | 4720 | 5387 | 3157 |
| 3471 | 6672 | 1155 | 5655 | 6382 |

(5726)

### கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

மருதனாமடம். சுன்னாகம்

★

ஆச்சிரமத்தின்

## 54-ம் ஆண்டு விழா

இம்மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

நண்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

நிகழ்ச்சி நிரல்

காலை 7-00 மணிக்கு
பரிசுத்த நற்கருணை ஆராதனை

காலை 8-00 மணிக்கு
திருமுழுக்கும்
நன்றி செலுத்தும் ஆராதனையும்

காலை 10-00 மணிக்கு
கலந்துரையாடல்

நண்பகல் 12-00 மணிக்கு
மன்றாட்டுச் செபம்

மாலை 3-30 மணிக்கு
பகிரங்கக்கூட்டம்

உங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள்.

வண சேவக் சாமுவேல் தேவரட்னம் அல்பிரட்
(சாம் அண்ணன்)

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம், (5687)
மருதனாமடம், சுன்னாகம்.

### பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்

## PATRICIAN INSTITUTES

அகிலஉலக கெயர் மரவேலை, கட்டுவேலை

## பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் (Care International) ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித் தகைமை:

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்

### வெந்துயரால் வாடுகின்றோம் வேதனையால் மாளுகின்றோம்



செல்வி

## இளவேணி அதிரூபசிங்கம்

வல்வெட்டித்துறை

பல்கலைக் கழகம் சென்று
பல்கலைகள் பயிலவென்று
பயணமதை மனதிற் கொண்டு
படகொன்றின் துணையும் கொண்டு
கடலினிலே செல்லும் போது
கொடிய அலை வலுவும் கொண்டு
படகினுள்ளே பாய்ந்துவிட
படகதுவும் நிலை இழந்து
கடலினிலே கவிண்டிடவே
கணப்பொழுதில் அம்மா நீயும்
கடலடியில் சென்றும் ஏனோ
கண்களையும் மூடிவிட்டாய் ?
பொன்னுடலின் பொலிவுதனை
கண்களினால் கண்டிடவே
கண்கள் எல்லாம் பூத்துநிற்க
இதுவாறும் காத்துநின்றோம்
பொன்னுடலும் காணவில்லை
துன்பமதும் தாழவில்லை
வெந்துயரால் வாடுகின்றோம்
வேதனையால் மாளுகின்றோம்.

ஐயா, அம்மா, அக்கா, தம்பியர்,
உற்றார், உறவினர், பற்றுமிகு நண்பர்கள்,
பாசமுடன் பழகியோர்.

சி-7217)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-20

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்-பூநகரி பரமன்கிராய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தந்தை, மகன் ஆகிய இரண்டு தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பளை - இத்தாவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
பளைப்பிரதேசப் பொறுப்பாளர்.

**லெப்.சமுத்திரன்** (சண்முகம் சந்திரமோகன்-திருமலை)

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் கரீம்** (———)

1990 ஆம் ஆண்டு மட்டு - தாந்தாமலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில்வீரச்சாவெய்திய-

## ஸ்தாபகம் - 1868

### "Lighted to give Light" - மகுட வாசகம்

மேற்படி கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கு முகமாகவும், கடந்து சென்ற காலத்தின் நினைவுப் பெட்டகமாகவும், மலரொன்றை வெளியிட இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது. இம் மலர் காத்திரமான வரலாற்றுப் பொக்கிஷமாகத் திகழ இக்கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வேண்டுகின்றோம். இவர்களிடமிருந்து இக்கல்லூரியின் வரலாறு, அதன் சாதனைகள், இக் கல்லூரியின் வாழ்வுக்கும் வளத்துக்கும் தம்மை அர்ப்பணமாக்கியவர்கள், இங்கு பெற்றுக் கொண்ட மறக்க முடியாத அனுபவங்கள் தொடர்பான ஆக்கங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எதிர்பார்க்கிறோம்.

இம்மலர் வெளியீட்டை யொட்டி பின்வரும் போட்டிகளும் இடம் பெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

### 1. அட்டைப்பட ஓவியப் போட்டி:

(அ) 25 C M × 20 C M அளவான அட்டைக்குரிய ஓவியம்.

(ஆ) மலர் வெளியீட்டின் நோக்கினை துல்லியமாக்குவதாக இவ் ஓவியம் அமைதல் வேண்டும்.

### 2. திருமதி இ மதியாபரணம் நினைவுப் பரிசிலுக்கான சிறுகதைப் போட்டி:

இதற்கான விடயப்பரப்பு ஆக்குவோரின் தேர்வுக்குரியது.

### 3. செல்வி லீ. வன்னியசிங்கம் நினைவுப் பரிசிலுக்கான கவிதைப் போட்டி:

பண்டு தொட்டு மண்டு மிசைப் பாடசாலை எங்கள் தாபனம்
அண்டு நெருப்பதுண்டு விட்ட சாம்பற் குவியலான போதிலும் .........

மேற்படி தலைப்பில் 18 தொடக்கம் 30 வரையான வரிகள் கொண்ட கவிதை ஆக்கி அனுப்பவும்.

### 4. செல்வி R. J. மான் நினைவுப் பரிசிலுக்கான கட்டுரைப் போட்டி:

(1) அல்லல்கள் மத்தியிலும் அணையா ஒளி ஏற்றிடுவோம்.

(2) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி என் உயர்வுக்கு வழிகாட்டி.

(3) அறிவைப் போற்றிடுவோம்; அனைத்தையும் நாம் வென்றிடுவோம்.

மேற்கூறிய தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 300 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைந்து அனுப்ப வேண்டும்

மேற்படி போட்டிகளில் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள், இங்கு கடமை ஆற்றிய, ஆற்றுகின்ற ஆசிரியர்கள் பங்குபற்றத் தகுதியானவர்கள் போட்டிக்கான முடிவுத் திகதி 30 09 93 Sep. 93 ஆகும் போட்டிக்குரிய ஆக்கங்களுடன் தமது முழுப் பெயர், முகவரி, பெயர் மாற்றம் பெற்றவராயின் முந்தைய பெயர் இக்கல்லூரியில் கற்ற அல்லது கற்பித்த காலம் என்பவற்றை தனியான தாளில் எழுதி இணைத்து அனுப்பவும். போட்டிக்கான ஆக்கங்கள் இச்சங்கத்தினரல்லாத நடுவர் குழுவினால் பரிசீலிக்கப்படும். போட்டித் தெரிவுகளில் மலராசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

மலராசிரியர், 125ஆம் ஆண்டு நிறைவு மலர்,
C/O திருமதி க. துரைசிங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி.

பிற தமிழ் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

மலராசிரியர், 125ம் ஆண்டு நிறைவு மலர்,
C/O திருமதி பு சண்முகலிங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி

ஆங்கில ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

மலராசிரியர், 125ஆம் ஆண்டு நிறைவு மலர்,
C/O செல்வி ச. வேலுப்பிள்ளை,
பழைய மாணவர் சங்கம,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி.

பழைய மாணவர் சங்கம், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி. — மலராசிரியர், 125ம் ஆண்டு நிறைவுமலர்.

(5708)

---

# PATRICIAN INSTITUTES

அகிலஉலக கெயர் மரவேலை, கட்டுவேலை

## பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் (Care International) ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சித் தகைமை:**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்
8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்

**பயிற்சிக் காலம்:** $2\frac{1}{2}$ மாதங்கள்

கொடுப்பனவு: ஸ்தாபனப் பயிற்சியின் போது [$2\frac{1}{2}$ மாதங்கள்] மாதம் 600/- உம் பயிலுனர் பயிற்சியின் போது [10 மாதம்] வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 25. 08. 1993

**நேர்முகப் பரீட்சை திகதி:** 28. 08. 1993
நேரம் காலை 9.00 மணி

விண்ணப்பங்கள் யாவும்

**பதிவாளர்:**
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்,
59, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
[சி-7223]

---

நீங்கள் பெறுமதி மிக்க

## தங்கப் பரிசில்களை வென்றெடுக்க

இதோ ஒரு

## அரிய சந்தர்ப்பம் !!

15 08 93ற்கும் 30 12 93ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 15,000 (பதினையாயிரம்) கீழே தரப்பட்ட போத்தல்களை ஒப்படைக்கும் போது அதற்குரிய பணத்தைப் பெறுவதுடன் தங்கப் பரிசில்களையும் மேலதிகமாகப் பெறுவீர்கள். போட்டிக்கு சேர்த்துக் கொள்ளப்படும்

போத்தல்களின் விபரம்

1 ஜாம் / புரோட்னெக்ஸ்
2 பியர் / நெல்லி 625 m. l.]
3. கோடியல் [கறுப்பு / வெள்ளை] (750 m l.)
4. மோல்டோவா [சிறியது] மூடியுடன்
5 போன்விடா [சிறிது] மூடியுடன்
6. ஹார்லிக்ஸ் / வீவா [சிறியது] மூடியுடன்
7. சோஸ் [325 m. l.]

இப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

### ரேஸ்ட்லைன் இண்டஸ்ரீஸ்
[தனி] லிமிட்டற்
14, சீனியர்ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு: 15 000 போத்தல்களை சேகரிக்கும் ஒவ்வொருவருக்கும் பரிசில்கள் உண்டு.
[சி-7210]

---

உற்றார், உறவினர், பற்றுமிகு நண்பர்கள்,
பாசமுடன் பழகியோர்.
சி-7217)

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-20

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்-பூநகரி பரமன்கிராய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தந்தை, மகன் ஆகிய இரண்டு தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பளை - இத்தாவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
பளைப்பிரதேசப் பொறுப்பாளர்.

**லெப்.சமுத்திரன்** (சண்முகம் சந்திரமோகன்-திருமலை)

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் கரீம்** (— — —)

1990 ஆம் ஆண்டு மட்டு - தாந்தாமலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில்வீரச்சாவெய்திய-

**கமால்** (சின்னையா சபாரத்தினம் - கோயில் போரதீவு -மட்டு)

மட்டு - வெல்லாவெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரிலவீரச்சாவெய்திய-

**மைக்கல்ராஜ்** (சின்னத்தம்பி விநாயகமூர்த்தி கோயில் போரதீவு-மட்டு)

மட்டு-40-ம் கொலனிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**முகிலன்** (— பத்தன்-திருப்பழுகாமம்-மட்டு)

யாழ்-வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

**பகவான்** (சின்னத்தம்பி சதீஸ்வரன் - கோண்டாவில் வடக்கு - யாழ்)

**நவம்** (மகாலிங்கம் மோகன்-ஊரெழுகிழக்கு, சுன்னாகம் -யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட தளவாயைச் சேர்ந்த 02 கூலித்தொழிலாளர், சித்தாண்டியைச் சேர்ந்த விவசாயி மற்றும் ஐயங்கேணியைச் சேர்ந்தவர் ஆகிய 04 தமிழர்கள் ஏறாவூரில் உயிருடன் தீமூட்டிக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

கிளிநொச்சியில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொலலப்பட்ட யாழ்-வசாவிளான் அச்சுவேலிப் பகுதிளைச் சேர்ந்த இருவர் உட்பட 04 தமிழர்கள். ஆனையிறவு கொம்பன் வெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

யாழ்- அராலிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொலலப்பட்ட 02 தமிழர்கள். வேலணை கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இதே இடத்தைச் சேர்ந்த யாழ்-வைதீஸ்வர வித்தியாலய ஆசிரியர்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சைபெற்று வரும்போது வீரச்சாவெய்திய-

**டிலக்ஸ்** (சின்னையா இராஜேந்திரன்- புதுமுறிப்பு, உருத்திரபுரம் - கிளிநொச்சி)

மட்டு - கொடுவாமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லூக்காஸ்** (சோ. கருணாகரன் அக்கரைப்பற்று - அம்பாறை)

**றிச்சாட்** (— செல்வகுலச்சந்திரன்- இலுப்பையடிச்சேனை - மட்டு)

1992ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கில் முப்படைகள் மேற்கொண்ட தாக்குதல்களில் பலியான ஒருபெண் உட்பட 05 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி 7221)

**சித்தன்கேணியில்**

## இலட்சியத்தோடு பிணைந்திருக்கும் சித்த மருந்து உற்பத்தி

"அரிஷ்டங்கள், மூலிகைச் சத்துக்கள், மாத்திரைகள், சூரணங்கள், எண்ணெய் வகைகள், லேகியங்கள் என நூற்றுக்கும் அதிகமான சித்த மருந்துகளைத் தயாரித்துச் சந்தைப்படுத்திவருகின்றோம். இன்றுவரை யாழ் மாவட்டத்தில் 90சத விகிதமானபிரதேச சபைகள் எம்மிடமிருந்து மருந்து வகைகளைக் கொள்வனவு செய்து இலவச வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு வழங்கி வருகிறது.

"அடையாறுமருந்தகமுறைகளையும் மற்றும் எங்கள் ஓலைச் சுவடிகளில் உள்ள குறிப்புகளையும் பயன்படுத்தி மருந்துகளைச் செய்கிறோம்" மதுமேகச் சூரணம் இருக்கிறது நீரிழிவுக்கு நிரந்தர குணம் அளிக்க வல்லது. ஒருதேக்கரண்டி (60 அரிசியெடை) பசுப்பால் அல்லது ஆறிய நீருடன் சாப்பிடடால் போதும். நீரிழிவு, இரத்தத்திற் சீனி அதிகரித்தல், சலத்தில் சீனி இவற்றால் ஏற்படும் கோளாறுகள் நீங்கும். ஆடாதோடைப் பாணியும் எமது சொந்தக் கண்டுபிடிப்பு குழந்தைகளின் சளி, இருமலைப் போக்கிவிடும் தன்மை இதற்குஇருக்கிறது." —இவ்வாறு எத்தனையோ விதமானமருந்துகளின்பயனை விளக்கினார் டாக்டர் பா. இராதாதேவி.

"யாழ்மாவட்டம் கூட்டுறவு உதவி ஆணையாளர் (பனை. தென்னை வள அபிவிருத்தி) திரு. தி. சபாரத்தினம் அவர்களுடனானசந்திப்புத்தான் எம் முயற்சிற்குக் கால் கோளாக அமைந்தது. ஜூன் 15-1992இல்சித்தன்கேணி-அராலி வீதியில் கூட்டுறவு மருந்துச் சாலை (CO-operative Pharmacy) என்ற பெயரால் இந்த நிறுவனம் எம்மால் ஆரம்பிக்கப்பட்டது.இன்று யாழ் குடாநாட்டிலுள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகள், சமாசம் ஆகியவற்றில்தெரிவுசெய்யப்பட்ட பேராளர்களைக் கொண்டு மையப்படுத்தப்பட்டு 1993-03-01 முதல் சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் (மட்டு) என்ற பெயருடன் செயற்படுகிறது" என்கிறார் உற்பத்தி உதவியாளர் செல்வி ராதா முருகேசு.

"சித்த மருந்துடன் ஆங்கில மருந்தும் சிலர் சேர்த்துக் கொடுக்கிறார்கள். இதிலெல்லாம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?" என்று டாக்டர் இராதாதேவியிடம் தயங்கியபடியே கேட்டோம்.

த்துவத்தில் பல நோய்களுக்கு மருந்து இருக்கிறது. நிரந்தரமாக நோயைப் போக்கிவிடும் வன்மை அதற்கு உண்டு. சில ஆயுர்வேத மற்றும் சித்தவைத்தியர்கள் ஆங்கில மருந்து கொடுக்கிறார்கள். அது ஆபத்



பா. இராதாதேவி
வைத்தியாச்சாரிணி

> சித்தன்கேணி கூட்டுறவு மருந்துச்சாலையில் மருந்துகளைத் தயார் செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அதன் முகாமைப் பணிப்பாளர் வைத்தியாச்சாரிணி (திருமதி)பா. இராதாதேவியைச் சந்தித்தோம் இவர் கணவர் வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம், சித்த வைத்தியத்தில் நிபுணர்களாக விளங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இராணுவ அனர்த்தங்களினால் கருகம்பானையிலிருந்து மூளாய்க்கு வந்தவர்கள். முதலில் தொழில் பார்த்ததும், சித்த மருந்துகளைத் தயார் செய்ததும் கருகம்பானையில்தான்

தானது. மருந்துப் பெட்டிகளில் எழுதியுள்ள உறுதிமொழிகளை வாசித்துத்தான் ஆங்கில மருந்துகளைச் சிபார்சு செய்கிறார்கள். சிலர் பிறற்னிசயோன்னை தேனில் குழைத்துச் சாப்பிடும்படி கொடுக்கிறார்கள். குழந்தைகளுக்குக் கூடச் சிபார்சு செய்கிறார்

ளில் அடைக்கப்பட்டிருக்கும் செயற்கை அழகுச் சாதனங்களுக்கு மாற்றாக மூலிகைகளிலிருந்து ஏதாவது தயாரித்துள்ளீர்களா?" என்று கேட்ட போது,

இப்போதைக்கு அவற்றைத் தயாரிக்கும் திட்டம் எம்மிடம் இல்லை. ஆனால் செயற்கை அழகுச் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இருக்கும் அழகையும் இழந்து விடாதீர்கள். அண்மையில் பற்பொடி தயாரிக்கவுள்ளோம். யாழ் குடாநாட்டில் விற்பனையாகும் ஒரு குறிப்பிட்ட வியாபாரப் பெயருடைய பற்பொடியில் உள்ள கூட்டுப்பொருள்கள் ஊறு விளைவிப்பவை. சர்க்கரினும் கலந்துள்ளது. மக்களின நன்மை கருதி பற் பராமரிப்புக்கு உகந்த பற்பொடியை விரைவில் தயாரிக்க உள்ளோம்.

"உங்கள் தயாரிப்பில் நல்லது கெட்டது எப்படித் தெரிந்து கொள்வது?" என்று தயக்கத்துடன் அவரைப் பார்த்த போது -

வைத்தியப்பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் எமது உற்பத்திகளுக்குச் சிறப்பு ஆலோசகராக இருக்கிறார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா அவர்களால் நியமிக்கப்பட்ட தர நிர்ணயக் குழு மருந்துகளின் நம்பகத் தன்மைக்கு உறுதியளிக்கிறது. இக் குழுவில் டாக்டர்கள் செ. து. சண்முகராசா, பூ. கைலாயநாதன். டாக்டர் (திருமதி) பு. நாகேஸ்வரி ஆகியோர்

**மதன் -**

இருக்கிறார்கள். மற்றும்படி பல அபூர்வமான மூலிகைகளைச் சேகரித்து. அவற்றின் இயல்பான தன்மைகளைப் பரிசீலித்துத்தான் பயன்படுத்துகிறோம என்று மூலிகைத் தயாரிப்புகளில் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

"சித்த மருந்து தேவையை முன்பு வைத்தியர்கள் எப்படிச் சமாளித்தார்கள்?"

> **கூட்டுறவு மருந்துச்சாலை அமைக்கப் பட்டதற்கான காரணங்கள்—**
> —மருந்து பற்றாக்குறை
> —மருந்து பெறமுடியாமை
> —உற்பத்தி இல்லை; தரம் இல்லை.
> —வைத்தியசாலைகள் இயங்க முடியாமை
> —நோய்ப் பெருக்கம். மரணம்.
> —நோயாளர் துன்பம்
> —மூலிகை வளம் பயன்படுத்தல்

# பொசுனியாவைக் கூறுபோடுவதற்கு சேர்பியர் குரோசியர் கூட்டுச்சதி!

பொசுனியாவில் இன்று முழு நேரமாக நடைபெறும் ஒரேயொரு கைத்தொழில் சவப்பெட்டி தயாரித்தலேயாகும். தினம்தோறும் கொல்லப்படும் முசுலிம்கள் தொகை அதிகரிப்பதால் இதற்கான தேவையும் அதிகரிக்க இப்போது பெரும் மரத்தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. சரயேவோ (Sarajevo) நகரத்தில் இத்தட்டுப்பாட்டை நீக்க ஒரு வழி கண்டுபிடித்துள்ளார்கள். 1984-ம் ஆண்டு பனிக்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற புகழ்பெற்ற விளையாட்டரங்கின் மரஇருக்கைகள் இன்று இறந்தோரை தன்னுள் அடக்கும் பெட்டிகளாகின்றன. மனிதத்தின் சிறப்பை குறித்த இந்த விளையாட்டரங்கு இன்று மனிதத்தின் அவலத்தை குறிக்கும் நிலைக்கு மாறிய முரண் இது. இது மட்டுமன்றி இங்குள்ள எல்லா இடுகாடுகளும் இடமின்றி நிரம்பிவழிவதால் பொது இடங்கள் புதைகுழிகளாகின்றன. இன்றும் அதற்கும் வழியில்லாமல் ஒலிம்பிக் விளையாட்டரங்கின் செங்களிமண்பூமியே இடுகாடாகிவிட்டது. இறப்பிலும் எம்மை நிம்மதியாக சேர்பியர் விடுகிறார்களில்லை என பொசுனிய முசுலிம்கள் கதறுகிறார்கள். ஏதாவது இறுதிச்சடங்கில் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் தொலைக்காட்சி கருவியைகண்டாலே போதும், உடனடியாக அவ்விடத்திற்கு சேர்பியர்களின் ஏவுகணை வந்து சேரும்.இதனால் இன்று வெளிநாட்டு செய்தியாளர்களை இம்மரணச் சடங்கிலிருந்து கலைப்பதே முசுலிம்கள் செய்யும் முதல் வேலையாக இருக்கின்றது. இவ்வாறாக பொசுனிய சோகத்தின் பல்வேறு கீற்றுக்கள் இன்று உலக செய்தி நிறுவன முகவர்களால் சிறுகதை போல் எழுதப்பட்டு வெளியிட்ட . வண்ணமேயுள்ளன. பொசுனிய சோகத்தின் இப்பரிமாணங்களை பார்க்கும் போது "இத்தகைய படுபாதகச் செயல்களை மேற்குலகம் இன்று அங்கீகரித்து அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஏனென்றால் நாங்கள் முசுலிம்கள். ஆனால் நாங்கள் அல்லாவை மேலுலகில் சொர்க்கத்தில் சந்திக்கும் போது இவர்கள் எல்லாம் நரகத்தில் கிடந்து உழல்வார்கள்" என மனம் வெதும்பி பொசுனியா முசுலிம் இமாம் சாபமிட்டதை மனம் கொள்ள

ளப்பியிருந்தோம். அண்மையில் "நியூஸ் வீக் இதழில்" ஒருவருடத்திற்கு மேலாக பொசுனிய விவகாரம் குறித்து தமது கைகளை முறுக்கியும் திருப்பியும் கொண்டிருந்த நாடுகள் இப்போது முற்றாக பொசுனிய முசுலிம்களை கைகழுவிவிட முடிவு எடுத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளது. ஏனென்றால் பொசுனியா விவகாரம் குறித்து இதுவரை எடுக்கப்பட்ட எந்த முடிவுமே ஏட்டளவிலேயே உள்ளன. ஐ நா. வும் ஐரோப்பிய பொருளாதார சமூகமும் இணைந்து வைத்த பொசுனியாவை 10 அலகுகளாக பிரிக்கும்திட்டம்; பொசுனியா முசுலிம்கட்கு பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தும் திட்டம்; சேர்பியர் நிலைகள் மீது விமானத்தாக்குதல்; முசுலிம்கட்கு ஆயுத விநியோகம் என எல்லாமே இன்று கிடப்பில் போடப்பட்டுவிட்டன.

இவை எல்லாவற்றுக்கும் புறம்பாக இப்போது புதிய திட்டமொன்று முன் வைக்கப் பட்டுள்ளது. இதிலுள்ள அதிசயம் என்னவென்றால் இத் திட்டத்தை ஐ.நா.வோ அல்லது வேறெந்த ஐரோப்பிய நாடுகளோ முன் வைக்கவில்லை. சேர்பியத் தலைமையும் குரோசியத் தலைமையும் தமக்குள் இரகசிய பேச்சுவார்த்தைகள் நடாத்தி வெளியிட்ட இச் சமாதானத்திட்டம் மிக விசித்திரமானது. அண்மைக் காலமாக பொசுனியாவில் சேர்பியருக்கும் குரோசியருக்கும் இடையே ஒரு ஆபத்தான உடன்பாடு ஏற்பட்டது இப்போது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. முசுலிம்களை கொன்றொழிப்பதில் அவர்கள் நிலங்களைப் பறிப்பதில் இவ்விரு பகுதியினருமே தமக்குள் இன்று ஒத்து செயற்படுகின்றனர். இன்று பொசுனியாவில் ஏற்பட்டுள்ள மிக மோசமான திருப்பம் இது. இன்று பொசுனிய சேர்பியர் நிலைகட் கூடாக குரோசியர் படை வருவதும் குரோசிய மக்கள்செல்வதும் குரோசியநிலைக்கு ஊடாக சேர்பியர் டாங்கிகள் செல்வதும் நம்பமுடியாத காட்சிகளாகின்றன. 50 வருடங்களாக தமக்குள் மோதிய மிலாசவிச் குரோசியத் தலைவர் பிரான்கோ துஜ்மன் ஆகிய இருவரும்பொசுனியாவை தமக்குள் பங்கிட திட்டம்ஒன்றாக தீட்டியதன் பயனாக சேர்பியாவில் காயம்பட்ட குரோசிய போர் வீரரை சேர்பியர் தமது வைத்தியசாலைகளில் அனுமதிக்கின்றனர். இரு பகுதியும் கூட்டாக சேர்ந்து பொசுனிய நகரங்கள் மேல் தாக்குதல் தொடுக்கின்றனர். ஐ நாவின் உணவு வாகன அணிகளிடம் "வீதித் திருத்த வரியாக" பெரும் தொகைப் பணத்தை அறவிடுகின்றார்கள். எனவே இன்று பொசுனிய முசுலிம்களின்கதைமாடேறி மிதித்த கதை தான்..

எனவே இரண்டு ஆக்கிரமிப்பாளரும் வைத்த அமைதித் திட்டம் இவ்வாறுதான் இருக்

இவர்கள் பொசுனியாவில் முசுலிம்களை தமது பொது எதிரியாகக் காண்பதில் மட்டும் ஒற்றுமைப் பட்டுள்ளனர். இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதில் எவர்க்கும் சந்தேகமில்லை. ஏனெனில் இப்போதும் குரோசியாவின் சில பகுதிகள் சேர்பியர் வசமே இருப்பதால் பொசுனியாவை துண்டு போட்டபின், நிலை பழையபடிமோதலிலேமுடியும் ஆனால் இப்போதுசேர்பிய தலைவர் சியோலோபடான்

கின்றது. பொசுனியாவின் 50 வீதம் நிலப்பகுதி பொசுனிய சேர்பியருக்கும்30வீதம் பொசுனிய குரோசியர்க்கும் எஞ்சிய 20 வீதம் முசுலிம்களுக்கும் என இத் திட்டம் புதிய பொசுனிய வரை படம் ஒன்றை கீறுகிறது. அது மட்டுமன்றி பொசுனிய சேர்பியரும் குரோசியரும் விரும்பினால் தமது பகுதிகளை சேர்பியாவோடும் குரோசியாவோடும் இணைக்கவும் இத் திட்டத்தில் வழி வகையுண்டு. அதாவது அகன்ற சேர்பியா பரந்த குரோசியா என இரு படையெடுப்பாளர்க்கும் இத் திட்டம் வெகுமதி அளிக்கின்றது. இத் திட்டமே இன்று வியன்னாவில் முசுலிம்கள் மீது திணிக்க முயலப்படுகின்றது. முசுலிம்களோ இது இனச் சுத்திகரிப்பை முற்றாக அங்கீகரித்து விடும் செயல் என மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இக் காரணம் பற்றியே பொசுனிய சனாதிபதி இசபெகோவிச் இத் திட்டத்தை வன்மையாக எதிர்த்தார். இதனை ஏற்க மறுத்தார். மேலும் தாக்குதல் தொடரும் என சேர்பிய குரோசியர் எச்சரிப்பதால் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்.

இத் திட்டத்தின் அடிப்படையே எவர்க்கும் புரியவில்லை. போருக்கு பொசுனியாவின் சனத்தொகையில் 44 வீதம் முசுலிம்களே. அது மட்டுமன்றி புதிய பொசுனிய வரைபடத்தின் படி முசுலிம்கட்கு கிடைக்கப் போகும் பகுதி இரு நிலத்துண்டுகளாக

**பாலகுமாரன்**

> ## பொஸ்கோவும் அட்மிராவும்
>
> இதுவரை கொல்லப்பட்ட 138,000 பொசுனியரில் பொஸ்கோவும் அட்மிராவும் அடங்குவர் என்றாலும் இவர்கள் கதை வேறானது. பொஸ்கோ ஒரு பொசுனிய சேர்பிய வாலிபன். அட்மிரா ஒரு முசுலிம்இளம்பெண் இருவர் வயதும் 25 இவ் இருவரும் தமது கல்லூரிக் காலத்திலிருந்தே மனமொத்த இணை பிரியாக் காதலர்கள். மோதல்கள் காரணமாக சரயேவோவைவிட்டு சேர்பியா செல்ல பொஸ்கோவின் குடும்பம் முடிவு எடுத்த போது பொஸ்கோ சரயேவோவில்தங்கிவிட்டான்.காதலி அட்மிராவோடு இருப்பதற்காக இம் முடிவை அவன் எடுத்தான். இப்போது அட்மிராவை தவிர வேறுயாரும் பொஸ்கோவிற்கு நகரத்தில் இல்லை.
>
> பொஸ்கோவின் அன்புக்கு பதிலாக அவனோடு சேர்பியா சென்று வாழ அட்மிரா ஒருவாறாக முடிவு எடுத்தாள். இருவரும் நீண்டகால முயற்சியின் பின் உள்ளூர் படைத்தளபதிகளோடு உடன்பாடு கண்டு கால் நடையாக ஆபத்து மிகுந்த பகுதிகட்கு ஊடாக தமது பயணத்தை தொடங்கினர். ஆனால் எண்ணியது நடக்கவில்லை. பயணம் முடியு முன்னரே இனம் தெரியாத துப்பாக்கிரவைகள் அவர்களை நோக்கி பறந்து வந்தன. அந்த இடத்திலே பொஸ்கோ உடனடியாக உயிரிழந்தான். மோசமாக காயம் பட்ட அட்மிராவோ தவழ்ந்து சென்று தனது கையால் பொஸ்கோவை அணைத்த பின்னரே உயிர்விட்டாள்.

அமைந்தது. ஜூன் 15-1992இல்சித்தன்கேணி-அராலி வீதியில் கூட்டுறவு மருந்துச் சாலை (CO-operative Pharmacy) என்ற பெயரால் இந்த நிறுவனம் எம்மால் ஆரமபிக்கபபட்டது.இன்று யாழ் குடாநாட்டிலுள்ள பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகள், சமாசம் ஆகியவற்றில்தெரிவுசெய்யப்பட்ட பேராளர்களைக் கொண்டு மையப்படுத்தப்பட்டு 1993-03-01 முதல் சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் (மட்டு) என்ற பெயருடன் செயற்படுகிறது'' என்கிறார் உற்பத்தி உதவியாளர் செல்வி ராதா முருகேசு.

''சித்த மருந்துடன் ஆங்கில மருந்தும் சிலர் சேர்த்துக் கொடுக்கிறார்கள். இதிலெல்லாம் உங்களுக்கு நமபிக்கை இருக்கிறதா?'' என்று டாக்டர் இராதாதேவியிடம் தயங்கியபடியே கேட்டோம்.

மூலிகை மருந்துகள் பற்றிய விளக்கங்கள் எங்கள் வாகடங்களிலும், ஓலைச் சுவடிகளிலும் தாராளமாக உள்ளன. சிதத மருத்துவத்தில் ஆங்கில மருந்துக்கு இடமில்லை. சித்தமரு

வர்கள். முதலில் தொழில் பார்த்ததும், சித்த மருந்துகளைத் தயார் செய்ததும் கருகம்பானையில்தான்

தானது. மருந்துப் பெட்டிகளில் எழுதியுள்ள உறுதிமொழிகளை வாசித்துத்தான் ஆங்கில மருந்துகளைச் சிபார்சு செய்கிறார்கள். சிலர் பிறற்னிசயோன்னை தேனில் குழைத்துச் சாப்பிடும்படி கொடுக்கிறார்கள். குழந்தைகளுக்குக் கூடச் சிபார்சு செய்கிறார்

மதன்-

இருக்கிறார்கள். மற்றும்படி பல அபூர்வமான மூலிகைகளைச் சேகரித்து. அவற்றின் இயல்பான தன்மைகளைப் பரிசீலித்துத்தான் பயன்படுத்துகிறோம என்று மூலிகைத் தயாரிப்புகளில் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

''சித்த மருந்து தேவையை முன்பு வைத்தியர்கள் எப்படிச் சமாளித்தார்கள்?''

**கூட்டுறவு மருந்துச்சாலை அமைக்கப்பட்டதற்கான காரணங்கள்–**

—மருந்து பற்றாக்குறை
—மருந்து பெறமுடியாமை
—உற்பத்தி இல்லை; தரம் இல்லை.
—வைத்தியசாலைகள் இயங்க முடியாமை
—நோய்ப் பெருக்கம், மரணம்.
—நோயாளர் துன்பம்
—மூலிகை வளம் பயன்படுத்தல்

கள். இது வீரியமான மருந்து. இதன் பின்விளைவுகளுக்கு மாற்றான மருந்து தெரியாத நிலையில் நோயாளிக்கே ஆபத்தாகி விடும் என்றார்.

''பளபளப்பான பெட்டிக

அதற்கு அவர் —

ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பே சித்த மருந்துகள் இருந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

(5ஆம் பக்கம் பார்க்க)

வந்து சேரும்.இதனால் இன்று வெளிநாட்டு செய்தியாளர்களை இம்மரணச் சடங்கிலிருந்து கலைப்பதே முசுலிம்கள் செய்யும் முதல் வேலையாக இருக்கின்றது. இவ்வாறாக பொசுனிய சோகத்தின் பல்வேறு கீற்றுக்கள் இன்று உலக செய்தி நிறுவன முகவர்களால் சிறுகதை போல் எழுதப்பட்டு வெளியிட்ட . வண்ணமேயுள்ளன. பொசுனிய சோகத்தின் இப்பரிமாணங்களை பார்க்கும் போது ''இத்தகைய படுபாதகச் செயல்களை மேற்குலகம் இன்று அங்கீகரித்து அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஏனென்றால் நாங்கள் முசுலிம்கள். ஆனால் நாங்கள் அல்லாவை மேலுலகில் சொர்க்கத்தில் சந்திக்கும் போது இவர்கள் எல்லாம் நரகத்தில் கிடந்து உழல்வார்கள்'' என மனம் வெதும்பி பொசுனியா முசுலிம் இமாம் சாபமிட்டதை மனம் கொள்ள நேரிடுகின்றது.

சிலவாரத்திற்கு முன் பொசுனிய சிக்கல் பற்றி எழுதிய போது இந்த உலகம் பொசுனியாவைக் கைவிட்டு விடுமோ என்ற அச்சத்தை

இதுவரை கொல்லப்பட்ட 138,000 பொசுனியரில் பொஸ்கோவும் அட்மிராவும் அடங்குவர் என்றாலும் இவர்கள் கதை வேறானது. பொஸ்கோ ஒரு பொசுனிய சேர்பிய வாலிபன். அட்மிரா ஒரு முசுலிம்இளம்பெண் இருவர் வயதும் 25 இவ் இருவரும் தமது கல்லூரிக் காலத்திலிருந்தே மனமொத்த இணை பிரியாக் காதலர்கள். மோதல்கள் காரணமாக சரயேவோவைவிட்டு சேர்பியா செல்ல பொஸ்கோவின் குடும்பம் முடிவு எடுத்த போது பொஸ்கோ சரயேவோவில்தங்கிவிட்டான்.காதலி அட்மிராவோடு இருப்பதற்காக இம் முடிவை அவன் எடுத்தான். இப்போது அட்மிராவை தவிர வேறுயாரும் பொஸ்கோவிற்கு நகரத்தில் இல்லை.

பொஸ்கோவின் அன்புக்கு பதிலாக அவனோடு சேர்பியா சென்று வாழ அட்மிரா ஒருவாறாக முடிவு எடுத்தாள். இருவரும் நீண்டகால முயற்சியின் பின் உள்ளூர் படைத்தளபதிகளோடு உடன்பாடு கண்டு கால் நடையாக ஆபத்து மிகுந்த பகுதிகட்கு ஊடாக தமது பயணத்தை தொடங்கினர். ஆனால் எண்ணியது நடக்கவில்லை. பயணம் முடியு முன்னரே இனம் தெரியாத துப்பாக்கிரவைகள் அவர்களை நோக்கி பறந்து வந்தன. அந்த இடத்திலே பொஸ்கோ உடனடியாக உயிரிழந்தான். மோசமாக காயம் பட்ட அட்மிராவோ தவழ்ந்து சென்று தனது கையால் பொஸ்கோவை அணைத்த பின்னரே உயிர்விட்டாள்.

இதன் பின் நடந்தது வியப்பானது. சேர்பியரும் முசுலிம்களும் யார் சுட்டது என்பதிலிருந்து யார் உடல்களை பொறுப்பு எடுப்பது என்பது வரை தமக்குள்மோதியதால் 5 நாட்கள் வரை இவ்விருவர் உடலும் அகற்றப்படவில்லை. இறுதியில் சேர்பியரே இம்முயற்சியில் வெற்றி பெற்றனர். பொசுனிய சோகம் என்பது இதுதான்.

...இன்று வியன்னாவில் முசுலிம்கள் மீது திணிக்க முயலப்படுகின்றது. முசுலிம்களோ இது இனச் சுத்திகரிப்பை முற்றாக அங்கீகரித்து விடும் செயல் என மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இக்காரணம் பற்றியே பொசுனிய சனாதிபதி இசபெகோவிச் இத்திட்டத்தை வன்மையாக எதிர்த்தார். இதனை ஏற்க மறுத்தார். மேலும் தாக்குதல் தொடரும் என சேர்பிய குரோசியர் எச்சரிப்பதால் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்.

இத்திட்டத்தின் அடிப்படையே எவர்க்கும் புரியவில்லை. போருக்கு பொசுனியாவின் சனத்தொகையில் 44 வீதம் முசுலிம்களே. அது மட்டுமன்றி புதிய பொசுனிய வரைபடத்தின் படி முசுலிம்கட்கு கிடைக்கப் போகும் பகுதி இரு நிலத்துண்டுகளாக - முற்றாக நிலத்தால் சூழப்பட்ட பகுதியாக உள்ளது. அது மட்டுமன்றிஏட்ரியாட்டிக்கடற்துறைக்கு இவர்கள் போகும் பாதையும் குரோசியர் கட்டுப்பாட்டிலே இருக்கும் வகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரான்சின் தலைநகரான பாரிஸில் ஸார்செல்; வெடிக்கும் தருணத்தில் ஓர் எரிமலையாக...

நம் தமிழர்களின் கனவு நகரமான லண்டனில் 'குட்டி இந்தியா' வாகக் குறிப்பிடப்படும் சவுத்ஹோல் (Southall) லண்டன் புறநகரப் பிரிவில் தனித்துவமாக இருப்பது அறியப்பட்டதொன்று.

பாரிஸின் புறநகர்ப்பிரிவில் வெளிநாட்டுப் புலம்பெயர்ந்தவர்களால் கவரப்படும் பகுதி ஸார்செல் (Sarcelle) என்றால் பொருத்தம்.

நாளாந்தம்ஏதோ சண்டை, சச்சரவு, கடத்தல்......... குற்றங்களுக்குப் பஞ்சமில்லை. தவிர புலம்பெயர்ந்தவர்களுக்கிடையே பல்வேறு கோஷ்டி மோதல்கள் ...... தமிழர்கள் அன்பாகப் பெயரிட்டு அழைக்கும் அடையார், கறுப்பர், யூதர் இவர்கள் பற்றி கொஞ்சமேனும் அறிய வேண்டாமா?

புலம்பெயர் வாழ்வில் பொருள் தேடலில் மட்டுமே முழுமையாக நாட்டம் காட்டும் நம்மவர், எம்மைச் சுற்றியுள்ள சூழலையும் வாழ்வையும் அறிந்து மதிப்பிட வேண்டாமா?

நியூயோர்க் கறுப்பு-வெள்ளை மோதல்களால் பிரசித்தி பெற்ற நகரம் அவ்வாறு எதிர்காலத்தில் பிரான்சில் எதிர்பார்க்கப்படும். நகரம் ஸார்செல் வல்து வாஸ் (Val Doise) என்ற நிர்வாகப் பிரிவில் ஸார்செல்-பாரிசின் புறநகர் பகுதியில் அமைந்த இந்த நகரம் பெரும்பாலும் பலவேறு நாடுகளைச் சேர்ந்த குடியேற்ற வாசிகளை உள்ளடக்கி ஏனைய நகரங்களில் இருந்து வேறுபட்டு நிற்கிறது. பொதுவில் பிரான்சிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்கொள்ளப்படும் பொருளாதாரப் பிரச்சினையானது இங்கு குடியேறியுள்ள பல்வேறு தேச இனத்தவர்களுக்கிடையே ஒரு எச்சரிக்கையாகவும், அவர்கள் மீதான தாழ்ப்புணர்வுகளாகவும் வெளிப்படுகின்றன.

இனக்குழுக்களுக்கிடையிலான மோதல்களைக் காணும் போது நியூயோர்க்குடன் ஒப்பிடாமல் இருக்க முடியாது. ஒரு வித்தியாசம், நியூயோர்க்கில் ஆயுதங்கள் பாவிக்கப் படுகின்றன. இங்கு ஆயுதம் இனமும் வரவில்லை! நியூயோர்க் போன்றே கறுப்பர்களும், யூதர்களும் அடுத்தடுத்து நெருக்கமாகவே குடியிருப்புகளைக் கொண்டுள்ளனர்.

அரசல் புரசலாக இதுவரை காணப்பட்ட மோதல்கள் போலல்லாமல் இப்போது வெடித்துச் சிதறும் அபாய நிலையிலுள்ளது என்று கூறுபவர் ஆய்வாளர் மார்சல் (Marshall). இத் தொகுதியில் அரைவாசிப் பகுதியில் 100க்கும் மேற்பட்ட இனக்குழுக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இங்கு போதுமான அளவில் பொலிஸ் நிலையங்கள் இல்லை. அது மட்டுமல்ல குடியேற்ற வாசிகள் பொலிசாருக்கு ஒளிந்துப் பிடித்து விளையாடும்வகையில் நடந்து கொள்கிறார்கள்.

1993 புதுவருட தினத்தன்று இத் தொகுதியில் அமைந்த நகரமான வில்லியே-லு-பெல் (Villiers - le - Bel) இல் இளைஞர் கழகமொன்று வருங்காலச் சந்ததியினரால் எரியூட்டப்பட்டுள்ளது.

ஆர்மோவில் (Armouville) என்ற பகுதி 1920-ம் ஆண்டுகளில் ஆர்மேனியாவிலிருந்து வந்தவர்கள் பெரும்பாலும் குடியேற்றப்பட்ட இடமாகும். அன்று தொடக்கம் தம்மை அமைதியான வாழ்வில் அடையாளம் காட்டியுள்ளனர்.இப்போது நடைபெற்ற தேர்தலின் போது இவர்கள், சோவியத்தின் மாற்றங்களால் நாட்டம் கொண்டுள்ள தம் விருப்பத்தை வெளிப்படுத்தி ஆர்மேனியாவிற்கு உதவும்படி வேட்பாளர்களை நிர்ப்பந்தித்துள்ளார்களாம்!

1950-60களில் சிறிய கிராமமாக இருந்த இப்பகுதி இன்று புறநகரமாக வளர்ச்சி பெற்றுள்ளது. பெரிய 'கான்கிறீட்' தூண்களால் உருவாகியுள்ள கட்டடங்களில் திட்டமிடலில்லாமல் நிகழ்ந்த குடிவரவுகளால் இன்று கட்டடங்களுள் வெடித்துச் சிதறும் பூகம்பங்களாக பிரச்சினைகள் குமுறுகின்றன.

ஸார்செல் பற்றி சற்று பின்னோக்கி பார்வை செலுத்தி முன்வருதல் பொருத்தமாக அமையும். இந்த ஆர்மேனிய வாசிகளின் ஆரம்பக் குடியேற்றத்தின் பின் உலக வாசிகளின் நுழைவு ஆரம்பமாகியது 1956 களின் சூயஸ் கால்வாய்ப் போரில் வெளியேறிய எகிப்திய யூதர்களும், பின் அல்ஜீரிய சுதந்திரத்தால் வெளியேறிய Pieds Noirs(கறுப்புப்பாதக்காரர்) என்ற பிரஞ்சுப் பிரஜைகளும்,துனிஸ் யூதர்களும், அல்ஜீரிய யூதர்களும், அல்ஜீரியப பிரஜைகளும், மக்கிறபன் (Maghreb:n) களும் இங்கு குடியேறினார்கள்.

இது ஒரு புறமிருக்க, அதிகரித்துவரும் நிலவாடகையை ஈடுகொடுக்க முடியாத பாரிசைச் சேர்ந்த ஏழை உழைப்பாளிகளும் தவிர்க்க முடியாதவாறு தம் வதிவிடங்களாக இப்பகுதியை மாற்றத்தொடங்கினர். அந்தியே (Antill Ais) என அழைக்கப்படும் பிரான்சுக்கு வெளியேயுள்ள பிரஞ்சு டிப்பார்ட்மென்டுகளிலிருந்து வறுமையின் காரணமாக வந்தவர்களும் இவ்விடத்தையே தம் பிரிய வாசஸ்தலமாக்கினர்.

ஆபிரிக்க நாடுகளிலேற்பட்ட வறுமையால் புலம்பெயர்ந்த கறுப்பர்களுக்கு இந்த இடம் திறந்த வரவேற்பை அளித்தது. சிறிலங்காவில் சிங்கள இனவாத அரசின் தாக்கத்தால் வெளியேறிய தமிழர்களும் பெருமளவில் இங்கேயே குடியேறினர். துருக்கிய முஸ்லிம் அரச தொல்லையால் விரட்டப்பட்ட துருக்கிய கிறீஸ்தவர்களும். ஐரோப்பியக் கனவுலக நினைவுகளால் தூண்டப்பட்டு வந்த பல்வேறு தேசத்தவர்களும் இவ்விடமே விரும்பிய குடியேற்ற பூமியாகியது.பாகிஸ்தானிகளும் நிறையவே காணப்படுகின்றனர்.

ஸார்செல் வாசிகள் பற்றிய வரலாற்றை அறியும் போது அங்கு வாழ்ந்துவரும் பிரஜைகளின்கருத்துக்களை கேட்பது பொருத்தமானதாக இருக்கும்.

லாமுயத் (Lamuette) என்ற நகரம் இங்கு பேர் போனகூடான பகுதி எனலாம். இங்கே குடியேறியுள்ள அரபுக்களின் புதிய தலைமுறையினர் பழக்க வழக்கங்களில் 'இருதலைக் கொள்ளி' யாகக் காணப்படுகின்றனர்.இவர்கள் போதைவஸ்து தொடர்பானவர்களை அடித்து விரட்டுகின்றனர். முதியோரையும், பெரியோரையும் மதியாது தன் வழியே செல்கின்றனர். ஒரு விதத்தில் பார்த்தால், கட்டுப்பாடு இல்லாதவர்களாக கட்டாங்காலிகளாக தனித்துவம் பேணுகிறார்கள் இவர்களின் ஆளுமை வட்டம் இந்த நகரம் சார்ந்த பகுதி மட்டுமே. ''இந்த அரசாங்கங்கள் எங்களை ஒதுக்கி வைத்து ஓரம் கட்டியது. இப்போது மட்டும் ஏன் கிட்டே வருகின்றீர்கள்?'' என்ற வினாவுடன் சொல்பவர் 32 வயதான முறாட் (Mourad) என்ற இளைஞர் அணித்தலைவர். இவர் மேலும் கூறுகையில் ''அரசாங்கம் எமக்குத் தரும் வசதிகளை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த இடம் எமது பூமி'' என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகிறார்.

பெரிய மீசையுடன் காணப்படும் தேநீர்க்கடை வைத்துள்ள துயருக்கி தேசத்தவர் ஸார்செல் பிரச்சினைகள் பற்றி கூறுகையில், ''Cora'' என்ற பல் பொருள் சிறப்பங்காடி(L' Hyper Mar Che)யின் காவல் காரர்கள் அந்த இளைஞர்களுடன் மோதுகின்றார்கள்!'' என்று தன் அறிவுக்கெட்டிய மதிப்பீட்டை வெளிப்படுத்துகிறார்.

Watteou De Sarcelle என்ற இடத்தில் வசிக்கும் டாக்டர் Jean Rismondo ஸார்செல் பற்றி சுவாரசியமாகவே குறிப்பிடுகிறார் ''நாம் எமது நாடு அல்லது பிரதேசங்களில் இருந்து விரட்டப்பட்டது. ஸார்செலில் குடியேறத்தான்! இங்கு வந்ததுமே ஸார்செலுக்கேயுரியதான தனித்துவமான ஒழுங்குகளின் (i) ஆளுமைக்குக் கட்டுப்பட்டு ஈர்க்கப்படுகிறோம். எமது ஊரை அல்லது எமது பிரதேசத்தை யொட்டிய பாரம்பரிய செயல்பாடுகளை நாம் தொடர இங்கே நிறைய வாய்ப்பு கிடைக்கிறது. இதை அடிகோலியே எம்எதிர்கால வாழ்வின் நம்பிக்கைக் கோட்டை அஸ்திவாரமாகிறது. இன்று நாம் வாழும் இடமான 'நவீன தொடர்மாடிச்சேரி' (Les Ghettos)யை இடித்து நொருக்கினால்தான் பிரச்சினைகள் தீர்வாகுமென்று சிலர் சொல்வதை நான் முற்றாக மறுக்கிறேன்.

இங்கு வாழ்ந்து அனுபவித்துச் சுவை கண்டுள்ள பல தேசத்தைச் சேர்ந்த இனங்கள் சிறு குழுக்களுக்கான வடிவத்தைப் பெற்று விட்டன. இங்கிருந்து அடித்து நொருக்கி விரட்டினாலும அந்தந்தக் குழு வடிவங்களை மீளவும் தக்கவைக்கவே இக்குழுக்கள் நாட்டம் காட்டும. ஆக, பிரஞ்சு சமூகத்துடன் இரண்டறக் கலக்காமல் இக்குழுக்கள் தனித்தே இருக்கும.

[4 ஆம் பக்கம் பார்க்க]

சிறுகதை

# சுவடுகள்

கே. கபில்

நீண்ட நாட்களின்பின்னர், 'இல்லை' ஒரு சில வருடங்களின் பின்னர் என்று சொல்லலாம். "ராஜன்" தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் நின்று கொண்டிருந்தான். நேரம் மதியம் இரண்டு மணியையெட்டியிருந்தது ஏதோ வேலையாகத் தடைமுகாம் பகுதிக்கு வந்திருந்த ராஜன் அவ்விடத்தை விட்டகல மனமின்றி அங்கிருந்த கொட்டிலொன்றில் அமர்ந்திருந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். "மாலைவரை நின்று விட்டுச் செல்வோம்" மனம் தானே எண்ணியதை ஆமோதித்துக் கொள்கின்றது.

வவுனியா நகரில் இருந்து இராணுவத் தடைமுகாமைத் தாண்டி மக்கள் வரத் தொடங்கியிருந்தனர். இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர், குழந்தைகள்......வயது, பால் வேறுபாடுகளிற்கு அப்பாற்பட்டு, கைகளில், தோள்களில், தலைகளில் சுமையுடன் பல மைல் தூரம் நடந்து வந்து கொண்டிருந்த மக்கள்... சுமை அவர்களது தோள்களில் மட்டுமல்ல மனங்களிலும்தான் துன்பச் சுமை. அவனின் மனம் கனத்தது.

பல ஆண்டுகளுக்கு முன்னால்... அவனது மனம் வேகத்தோடு பின்னோக்கிப் பார்த்தது. இதே பாதையால் சொகுசு வாகனங்களில் சொகுசான பயணம். அங்கு, நீண்ட தூரப் பயணத்தின் களைப்பில்லை. தோள்களிலோ, மனங்களிலோ சுமையும் இல்லை. ஆனாலும் கால்களில் மாத்திரம் விலங்கு... ஆம் அடிமை விலங்கு. அது ஓர் இடைக்காலச் சுதந்திரம். ஆம் நீண்டகால அடிமைக்கு அது ஓர் இடைக்காலச்சுதந்திரம்தான். இன்று... கண்ணெதிரே...... ஆனாலும் எம்மக்கள் இன்னும் இன்னும் உறுதியோடு. நாளைய விடியலின் நம்பிக்கையோடு நடந்து வருவது மட்டும் தெளிவாகப் புரிகின்றது. அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் இந்த இடைக்காலத் துன்பத்தின் பின்னால் ஒரு நிலையான சுதந்திரம், அமைதி நிம்மதியான வாழ்க்கை என்பது- எண்ணும்பொழுது மனம் அமைதியடைந்து கொள்கின்றது.

"என்ன மச்சான் ஆழ்ந்த யோசனை. எந்தக் காம்ப் அடிக்கப்போறாய்." அருகில் வந்த நண்பன் ஆதரவாகத் தோள்களைத் தொட்டான்.

"இல்ல மச்சான் எங்கள் மக்களை நினைத்துக் கொண்டேன். பாவம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தத்துன்பம்" - நிச்சயம்நீண்ட நாட்களுக்கில்லை. விரைவில் மிக விரைவில் எம் தேசத்தின் விடிவில் இத்துன்பங்களிலிருந்து விடுதலை" சொல்ல [illegible]

றான். இருவரும் மெல்ல நடந்து வஸ் நிற்கும் இடத்தை அடைகின்றனர். நின்றிருந்த ஓரிரண்டு வஸ்களில் இடம்பிடித்துக் கொள்வதற்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். இங்கேயும் ஒரு போராட்டம்.

"மச்சான் என்னண்டு இதில போகப் போறாய்? நில்லு வேற வாகனம் வரும் ஏத்தி விடுறன்." கூறிய நண்பனை ஏறிட்ட ராஜன். 'இல்ல மச்சான் இவ்வளவு சனங்களும் இதிலதானே போகப் போகுதுகள். நான் நின்று கொண்டெண்டாலும் போறன்" தடுத்த நண்பனையும் பொருட்படுத்தாது வஸ்சில் ஏறிக் கொள்கின்றான் அவன்.

"தம்பி இதில இருங்கோ" அரக்கி இடம் தந்த அப்புவின் அருகில் அப்பாடா என்று அமர்ந்துகொள்கின்றான் ராஜன். அப்புவின் மடியில்இருந்த சின்னக்குழந்தை செல்லத்துடன் அவன் தலையைத் தொட்டு மாமா என்றது மழலைமொழியில். ஆனாலும் அதனை ரசிக்கும் மனநிலையில் அவன் இல்லை. போலியாகப் புன்னகைத்துக் கொண்டான். வஸ்சில் காற்றுப் புக இடமில்லாத சனக்கூட்டம். இருந்தும் மனம் நிறைவடையாத றைவர் அரைமனதுடன் வஸ்சை எடுத்தார். 'வழியில் ஏற்றிக்கொள்வோம்" என்று அவர் நினைத்திருக்கக் கூடும். உடைந்த வஸ், ஓட முடியாத வீதி இதுவும் வாழ்க்கைப் போராட்டம் சிந்தனையில் ஆழ்ந்தான் ராஜன்.

வஸ் புறப்பட்டு பத்து நிமிடங்கள் சென்றிருக்கும். வாசலில் நின்ற கிளினர் றைவரை நோக்கி "அண்ண பம்பர் சுத்துது கொஞ்சம் வேகமா ஓடுங்கோ" என்றான். கண்ணாடியைத் திறந்து வானத்தைப் பார்த்தான் ராஜன். இரண்டு பம்மர்கள்சுற்றியபடி இருந்தன. குண்டுவீச்சுக்கான அறிகுறி பெருமூச்சுடன் தலையை இழுத்துக்கொள்கின்றான் அவன். சனங்களைத் திரும்பிப் பார்த்த றைவர். "வெளியில பம்மர் சுத்துது. ஒருவரும் பயப்பிடாதையிங்கோ ஒன்றும் நடக்காது." கூறியபடி வஸ்சின் வேகத்தை அதிகரித்தான் பம்மர் என்றவுடன் சைற் கண்ணாடிகளால் வானத்தைப் பார்த்த மக்கள் ஆரம்பத்தில் சற்றுப் பதற்றப்பட்டார்கள் எனினும் பின்னர் அதற்கான அறிகுறியே இல்லை. பம்மர் அடிப்பதொன்றும் எங்கள் மண்ணில் புதிதல்லவே. இது எங்கள் நாளா[illegible]

இப்பொழுது இந்தச் சனங்கள் எத்தனை கடவுளை அழைத்து எத்தனை நேர்த்தி வைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கியிருப்பார்கள்" அப்புவின் ஆழமான சிந்தனைக்குரிய வார்த்தைகள். புன்னகைத்துக் கொண்டான் அவன் மக்களும் போராட்ட வாழ்க்கைக்கு தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். தனக்குள் எண்ணிக் கொள்கின்றான் ராஜன். திடீரென சிந்தனையைக் கலைத்தது அவனது திறந்திருந்த காதுகள். அவனது கவனம் வஸ்சின் நடுப் பகுதிக்கு ஈர்க்கப்பட்டது.

அங்கே மிகுந்த பதற்றத்துடன் காணப்பட்ட ஒரு குடும்பம். தந்தை, தாய் மூன்று இளம் குழந்தைகள் இரண்டு ஆண்கள் ஒரு பெண்பிள்ளை. வயது போய் விடவில்லை. இளங்குடும்பம் ஆனாலும் அவர்களின் மேல் ராஜனின் கவனம் திரும்பியதற்கு காரணம் வேறு அவர்கள் ஆளுக்காள் அவனுக்குப் புரியாத ஆங்கிலத்தில புதிராகக் கதைத்துக் கொண்டார்கள். அந்தச் சின்னக்குழந்தைகளும் சரளமாக ஆங்கிலம் பேசியதால் ஆர்வத்துடன் அவர்களை நோக்கினான் ராஜன். அவர்கள் பம்மர் பயத்தில் கிட்டத்தட்ட அழும் நிலைக்கே வந்து விட்டார்கள். அவர்களின் அருகில் இருந்த ஒருவர் 'நோபிராப்பிளம், நோ பிராப்பிளம்' என்று தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். அவர்களுக்கு தமிழ் தெரியாது போல் இருக்கின்றது என்று மனதில் எண்ணிக் கொண்ட ராஜன் தூண்டப்பட்ட ஆர்வத்துடன் அவர்களை ஆராய முற்பட்டான்.

> "இது கற்பனையில் உதித்ததல்ல. கட்டுக் கதையுமல்ல. சில ஆண்டுகள், மாதங்கள், வாரங்கள் என்று காலம் பல கடந்ததும் அல்ல. நாட்கள் ஆம் சில நாட்களுக்கு முன்னால் எங்கள் கண்ணெதிரே ............

ஆங்கில உச்சரிப்பு சுத்தமான வெள்ளைக்கார ஆங்கிலம் ஆராயும் ஆர்வத்தில் அருகில் இருந்தவரை மெல்லத்தட்டி "யார் அண்ண இவர்கள்"? என்றான் ராஜன். "தம்பி! இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாம். நீண்டகாலமாக லண்டனில்இருந்துவிட்டு இப்பதான் இங்குவந்திருக்கிறார்களாம்" என்றார் பெரியவர்ஓ என்றபடி அவர்களைப் பார்த்தான் அவன், அவர்களின் பதற்றம் இன்னும் ஓய்ந்தபாடில்லை நீண்டகாலம் லண்டனில் இருந்த பின் வருகின்றார்களா? இவர்களுக்கு பொம்மரைத் தெரிந்திருக்காதே! அதுதான் இந்தப் பதற்றம் 'அம்மா இதுதான் எங்களின் நாளாந்த வாழ்க்கையம்மா' மனதிற்குள் கூறியபடி அவர்களை நோக்கினான். அவர்களைப் பற்றி மேலும் அறியும் ஆர்வம் அவனுக்கு இத்தனை நேரத்தில் வஸ் நீண்டதூரம் வந்துவிட்டதால் அவர்களின் பதற்றம் தணிந்து இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தனர். அந்த அரை ஆங்கிலப் பெண்மணி அருகில் இருந்த பெண்களுடன் அளவளாவத் தொடங்கிவிட்டார். அரைகுறைத் தமிழ் ஆங்கிலக் கலப்பு உரையாடலின் நடுவே காதைப் புகுத்திக் கொண்டான் ராஜன். உரையாடலில் நடுவே கணவனுடனும் பிள்ளைகளுடனும் முழுமையான ஆங்கிலத்தில் கதைத்துக் கொள்கின்றாள் அந்தப்பெண்மணி. வஸ்சில் இருந்த அனைவருமே இவர்களையே நோக்கியிருந்தனர்.

"எங்கை இருந்து வாறியள்? எங்கை போறியள்"? அருகில் இருந்த ஓர் பெண்ணின் அடுக்கடுக்கான கேள்விகள் அவளிடம் அறியும் ஆவல் மட்டுமல்ல; அவர்களுடன் கதைப்பதை ஒரு பெருமையாகவும் கருதிக் கொள்ளும் அந்தப் பெண்ணின் அப்பாவித்தனம் புரிகின்றது. "நாங்க லண்டனில் இருந்து வாறம். கலம்பிற்கு வந்து ரூ டேயிஸ் தான். ரூடேதான் வவுனியா வந்து வாறம் யப்னாவிற்குபோறம்" கூறி முடிக்கின்றாள் அந்தப் பெண்மணி. "நீங்க லண்டனுக்கு போய் எவ்வளவு காலம்"? அருகில் அமர்ந்திருந்த அடுத்த பெண்ணின் கேள்வி. "ரென் இயேஸ் ஆகிற்றிது. நான் ருவன்ரி பைவ் இயேஸ் ஒல்டா இருக்கேக்குள்ளலண்டனுக்குபோனான். அப்பவே இவர் அங்கதான் இருந்தவர். இருவரும் ரெண் [illegible]

கிக் கொள்கின்றான். 'நான் மம்மியைப்பார்க்கப் போறன். என்ர மம்மியும் டடியும் மட்டுந்தான் யப்னாவில் இருக்கினம். இவற்ர சிஸ்ரர் ஒருவர் இருக்கிறார். அதுதான் பாத்திட்டுவருவமெண்டு போறம்" கூறி முடிக்கிறாள் ஆங்கிலப் பெண்மணி.

"உங்கள் பிள்ளைகள் தமிழ் கதைக்க மாட்டார்களோ? கொஞ்சமும் தெரியாதோ?" ராஜனின் சிந்தனையை கலைத்தது மற்றுமோர் பெண்மணியின் கேள்வி. 'ஐயோ இல்லை அவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது. நாங்களும்வீட்டில இங்கிலிசில்தான்கதைக்கிறது நாங்கள் கதைச்சா பேந்து பிள்ளைகளும் தமிழ் கதைக்கத் தொடங்கியிரும்." தமிழ் பேசுவது என்பதனை அவமானமாகக் கருதும் அந்த ஆங்கில மோகத் தாய் பெருமையுடன் கூறிக்கொள்கின்றாள். "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா"... யாரோ ஒரு ஏழைக் கவிஞனின் வரிகளைவேதனையுடன் நினைத்துக் கொண்டான் ராஜன். தாய் நாட்டை மறந்தவர்கள் ஏராளம். தாயை மறந்தவர்களோ ஏராளம், ஏராளம். ஆனாலும் தாய் மொழியை மறந்தவர்களை இன்றுதான் அவன் பார்க்கின்றான். தமிழ் பேச வெட்கப்பட்டு மிகவும் கஷ்ரப்பட்டுத்தான் மறந்திருப்பார்களோ... இருக்கும்.

"வட் இஸ் த நேம் ஒவ் திஸ் பிளேஸ் மம்மி?"... சிந்தனையைக் கலைக்கின்றான் சின்னப்பையன். இவ்வளவு நேரமும் கதையில் சேர்ந்துகொள்ளாத தந்தையார் குறுக்கிட்டு "கிலிநொச்சி" என்கின்றார். யன்னல் வழியே எட்டிப்பார்த்த ராஜனுக்கு சிரிப்புத்தான் வந்தது. இன்னும் மாங்குளம் வந்திருக்கவில்லை. அது பரவாயில்லல, ஏன் 'கிளிநொச்சி' என்றால் என்ன? உங்கள் பிள்ளை அந்த உச்சரிப்பைப் புரிந்து கொண்டுவிடும் என்று பயப்படுகின்றீர்களா? நா கேட்கத் துடித்தது. எனினும் நெஞ்சு தடுத்தது.

திடீரெனக் குலுக்கலுடன் நின்று கொண்டது பஸ். என்ன என்பதுபோல் வெளியில் எட்டிப் பார்த்தான் ராஜன். வஸ் முறிகண்டியில் நின்று கொண்டிருந்தது. நேரம் போனதே தெரியவில்லை. இவ்வளவு தூரம் வந்து விட்டோமா!! ராஜன் தன்க்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டான். சற்று நேர அமைதிக்காகவும், தாக சாந்திக்காகவும் மக்கள் இறங்கிக் கொள்கின்றனர். ராஜனுக்கு இறங்க வேண்டும் போல் இல்லை. மனம் பாரமாக இருந்தது. பஸ்சில் இருந்தபடியே லண்டன் குடும்பத்தைப் பார்த்தான். இறங்கி நின்ற பிள்ளைகள் முறிகண்டிப் பிள்ளை[illegible]

விட்ட ஒன்று. மனதில் கூறிக் கொண்ட ராஜனின் கண்கள் அந்தப் பிள்ளைகள் மேல் ஆழப்பதிந்தன. அந்த மூன்று பிள்ளைகளும் மிகவும் அழகாக இருந்தார்கள். ஆங்கில மண் அவர்களுக்கு அழகை அள்ளி வழங்கியிருந்தது. ஆனாலும் அவர்களுக்கோ இந்த மண்ணைத் தெரியாது; இந்த மக்களையும் தெரியாது; இந்த மண்ணில் நடப்பதும் புரியாது. தற்பொழுது கூட அவர்களால் ஒரு சிறிதளவு கூட தெரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு தாய் மொழியே தெரியாதே. பெருமூச்சொன்று வெளிப்பட்டது அவனிடமிருந்து.

வஸ் புறப்படுகின்றது பேட்டிக்காக மீண்டும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கின்றான் ராஜன். வஸ்சிற்கு வெ மிகுந்த புளுக்கம். எங்களுக்கு இது பழகிப்போய் விட்ட ஒன்று. ஆனாலும் லண்டனில் இயற்கையின் ஏ.சி.இல் வாழ்ந்த அவர்களுக்கு அது ஒத்துக் கொள்ளவில்லை. பிள்ளைகள் நெளிந்தனர். பெற்றோரோ அவர்களை மிஞ்சினர். இவர்கள் அவஸ்தைப் படுவதனைத் தாங்கிக் கொள்ள முடியாத ஒரு பெரியவர். "நோ பிராப்பிளம் திஸ் இஸ் போ சம்ரைம்." கனிவுடன் கூறுகின்றார். அன்னிய நாட்டிலிருந்து தனது நாட்டிற்கு 'வந்த ஒருவரை ஆறுதல்படுத்துகின்றாரோ, இல்லை தனக்கும் ஆங்கிலம் தெரியும் என்று தனது அரைகுறை ஆங்கிலத்தில் காட்டத்துடிக்கின்றாரோ?

"இவ்வளவு கஷ்ரம் என்று தெரிந்திருந்தால் நாங்கள் வந்திருக்கவே மாட்டம். இவ்வளவு கஷ்ரம் என்று நாங்கள் நினைக்கவேயில்லை. ஐயோ வெறி வெறி டிபிக்கல்ற் யேணி" வேதனையுடனும் பெருமூச்சுடனும் கூறிக்கொள்கின்றாள் அரை ஆங்கிலப் பெண்மணி. வந்த செயலுக்காக அவள் வருத்தப்படுவது புரிகின்றது. வஸ் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது நன்றாக இருட்டிவிட்டது நேரம் 8 மணி இருக்கும். இன்னும் அரைமணித்தியாலம் ஆவது செல்லும். ராஜன் மனதில் கணக்கிட்டுக்கொள்கின்றான். "நாளைக்கு வோட் ஓடுமா?" அருகில் இருந்தவரை கேள்வியோடு நோக்கினாள் அப்பெண். "தெரியாதக்கா. சிலவேளை ஓடும்; இரண்டு மூன்று நாளும் செல்லும்" சாதாரணமாகவே சொல்கின்றார் அருகிலிருந்தவர். "ஐயோ ரூ, திறி டேயிஸ் செல்லுமா? நாளைக்கே ஓடிட்டிது என்றால் பிரச்சினை இல்லை. நாங்கள் திறி வீக்ஸ் [illegible]

நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு வந்து செல்வதற்கே நாள்குறிப்பதில்லை. போகும் நேரம் கண்டுகொள்ள வேண்டியதுதான். இவர்கள் லண்டனில் இருந்து 3 வாரம் நாள் குறித்து வந்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தாய் மொழியை மட்டுமல்ல, தாயகத்தையே மறந்துவிட்டார்கள். இந்த மண்ணில் என்ன நடக்கின்றது என்பதே இவர்களுக்குப் புரியவில்லை. இவர்களுக்கு என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? .. ..

"அண்ண, அண்ண, நீங்கள் இதிலதானே இறங்கவேண்டும்" வஸ் றைவரின் குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தான் ராஜன். சுற்றும்பார்த்த அவன் கிளிநொச்சிக்கு வந்துவிட்டோமா? வந்ததே தெரியவில்லை. மனதில் எண்ணிக் கொண்டவன் றைவருக்கு நன்றி கூறிவிட்டு மனச்சுமையுடன் வஸ்சைவிட்டு இறங்கிக் கொள்கின்றான். இறங்கும் முன்னர் அவர்கள் எல்லோரையும் ஆழமாகப் பார்த்துக் கொள்கின்றான் அவன் அந்தப் பார்வையில் ஆத்திரமா? அனுதாபமா? இல்லை. அது உணர்ச்சியற்ற பார்வை. இன்னும் இன்னும் அவன் மனம் கனத்தது. தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாகி நிற்கும் ஆயிரக்கணக்கானோரை அவனுக்குத்தெரியும். பார்த்திருக்கிறான் ஆனாலும் தமது சொந்த மண்ணிலேயே அன்னியராகிநிற்கும் ஒருகுடும்பத்தை இன்றுதான் அவன் பார்க்கிறான். "இன்னும் ஒரு வாரத்தில் நீங்கள் போய்விடுவீர்கள். உங்களைப்பொறுத்தவரை இந்த மண்ணுக்கும் உங்களுக்கும் இருந்த தொடர்பு அறுபட்டு ஆண்டுகள் பத்தாகிவிட்டது. இது ஒரு இடைக்காலத் தொடர்பு. அதுவும் நீங்கள் விரும்பாத ஒன்று ஆனாலும் இந்த மண் தான் உங்கள் சொந்தமண் என்பதனை நினைவுபடுத்தியபடி உங்கள் பெற்றோர். அந்தச் சுவடுகள் மறையும் வரை இந்த மண்ணுக்கும், உங்களுக்கும் நீங்கள் விரும்பாத அந்தத் தொடர்பு இருந்துகொண்டேதான் இருக்கப் போகின்றது. உங்களுக்கு உங்கள் தாயகம், மன்னிக்க வேண்டும்: எங்கள் தாயகம் ஏதோ கூறிக்கொள்ள ஆசைப்படுவது புரிகின்றது. "இங்கே ஓர் உரிமைப் போர் நடக்கின்றது நிச்சயம் இந்தத் தாயகம் விடியும். அந்தநாள் விரைவில் மிகவிரைவில். அன்று "எங்களின் தேசம் இது எங்களின் தேசம்" என்று தமிழினம் தலைநிமிர்த்திக் கொள்ள தமிழீழம் மாத்திரம்தான். அன்றும் நீங்கள் வாருங்கள். உங்கள் பாதச் சுவடுகளை நாங்கள் மகிழ்வுடன் தாங்கிக் கொள்வோம்." அவர்கள் செவிமடுப்பார்களா என்ற சந்தேகத்துடனும் தலைநிமிர்த்தி உறுதியுடன் உரைக்கின்றது எங்கள் தாயகம்.

யோடு நடந்து வருவது மட்டும் தெளிவாகப் புரிகின்றது. அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் இந்த இடைக்காலத் துன்பத்தின் பின்னால் ஒரு நிலையான சுதந்திரம், அமைதி நிம்மதியான வாழ்க்கை என்பது- எண்ணும்பொழுது மனம் அமைதியடைந்து கொள்கின்றது.

''என்ன மச்சான் ஆழ்ந்த யோசனை. எந்தக் காம்ப் அடிக்கப்போறாய்.'' அருகில் வந்த நண்பன் ஆதரவாகத் தோள்களைத் தொட்டான்.

''இல்ல மச்சான் எங்கள் மக்களை நினைத்துக் கொண்டேன். பாவம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தத்துன்பம்'' - நிச்சயம் நீண்ட நாட்களுக்கில்லை. விரைவில் மிக விரைவில் எம் தேசத்தின் விடிவில் இத்துன்பங்களிலிருந்து விடுதலை'' சொல்ல நினைத்தான். ஆனாலும் வார்த்தைகள் அவனுக்கு ஒத்துழைக்கவில்லை. ''மச்சான் சனம் எல்லாம் வந்து முடிஞ்சிது. வா போவம். நீ கிளிநொச்சிக்குப்போகவேண்டும் அல்லோ'' நிமிர்ந்த ராஜன் ''சரி போவோம்'' எழுந்து கொள்கின்

டங்கள் சென்றிருக்கும். வாசலில் நின்ற கிளினர் றைவரை நோக்கி ''அண்ண பம்பர் சுத்துது கொஞ்சம் வேகமா ஓடுங்கோ'' என்றான். கண்ணாடியைத் திறந்து வானத்தைப் பார்த்தான் ராஜன். இரண்டு பம்மர்கள்சுற்றியபடி இருந்தன. குண்டுவீச்சுக்கான அறிகுறி பெருமூச்சுடன் தலையை இழுத்துக்கொள்கின்றான் அவன். சனங்களைத் திரும்பிப் பார்த்த றைவர். ''வெளியில பம்மர் சுத்துது. ஒருவரும் பயப்பிடாதையிங்கோ ஒன்றும் நடக்காது.'' கூறியபடி வஸ்சின் வேகத்தை அதிகரித்தான் பம்மர் என்றவுடன் சைற் கண்ணாடிகளால் வானத்தைப் பார்த்த மக்கள் ஆரம்பத்தில் சற்றுப் பதற்றப்பட்டார்கள் எனினும் பின்னர் அதற்கான அறிகுறியே இல்லை. பம்மர் அடிப்பதொன்றும் எங்கள் மண்ணில் புதிதல்லவே. இது எங்கள் நாளாந்த வாழ்க்கையோடு ஒன்றிப் போய்விட்ட ஒன்று மக்களும் அதற்கு பழகிப் போய்விட்டார்கள். அருகில் இருந்த அப்பு அர்த்தத்தோடு அவனைப் பார்த்தார். ''தம்பி காலம் எவ்வளவு மாறிப் போயிற்றுது பாத்தீரே. முந்தி எண்டால்

> ''இது கற்பனையில் உதித்ததல்ல. கட்டுக் கதையுமல்ல. சில ஆண்டுகள், மாதங்கள், வாரங்கள் என்று காலம் பல கடந்ததும் அல்ல. நாட்கள் ஆம் சில நாட்களுக்கு முன்னால் எங்கள் கண்ணெதிரே ..........

கில் இருந்த ஒருவர் 'நோபிராப்பிளம், நோ பிராப்பிளம்' என்று தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். அவர்களுக்கு தமிழ் தெரியாது போல் இருக்கின்றது என்று மனதில் எண்ணிக் கொண்ட ராஜன் தூண்டப்பட்ட ஆர்வத்துடன் அவர்களை ஆராய முற்பட்டான்.

யார் இவர்கள்? கணவன், மனைவியின் உருவத்தில் தமிழ் வாடை அடித்தாலும் உடையோ ஆங்கில நாகரிகமாக இருந்தது. குழந்தைகளின் உடையும், பேச்சும் முற்று முழுதான ஆங்கிலப் பிள்ளைகளைப் போன்றே இருந்தது.

''எங்கை இருந்து வாறியள்? எங்கை போறியள்''? அருகில் இருந்த ஓர் பெண்ணின் அடுக்கடுக்கான கேள்விகள் அவளிடம் அறியும் ஆவல் மட்டுமல்ல; அவர்களுடன் கதைப்பதை ஒரு பெருமையாகவும் கருதிக் கொள்ளும் அந்தப் பெண்ணின் அப்பாவித்தனம் புரிகின்றது. ''நாங்க லண்டனில் இருந்து வாறம். கலம்பிற்கு வந்து ரூ டேயிஸ் தான். ருடேதான் வவுனியா வந்து வாறம் யப்னாவிற்குபோறம்'' கூறி முடிக்கின்றாள் அந்தப் பெண்மணி. ''நீங்க லண்டனுக்கு போய் எவ்வளவு காலம்''? அருகில் அமர்ந்திருந்த அடுத்த பெண்ணின் கேள்வி. ''ரென் இயேஸ் ஆகிற்றிது. நான் ருவன்ரி பைவ் இயேஸ் ஓல்டா இருக்கேக்குள் லண்டனுக்குபோனான். அப்பவே இவர் அங்கதான் இருந்தவர். இருவரும் ரென் இயேசிற்கு பிறகு இப்பத்தான் சிலோனிற்கு வந்திருக்கிறம்.''

''ஏன் பிள்ள, இப்ப யப்னாவிற்கு என்னத்திற்கு போறியள்?'' இடையில் புகுந்தார் அருகில் இருந்த வயதபன அப்பு ஒருவர். ராஜன் காதுகளை இன்னும் கூர்மையாக்

என்றால் என்ன? உங்கள் பிள்ளை அந்த உச்சரிப்பைப் புரிந்து கொண்டுவிடும் என்று பயப்படுகின்றீர்களா? நா கேட்கத் துடித்தது. எனினும் நெஞ்சு தடுத்தது.

திடீரெனக் குலுக்கலுடன் நின்று கொண்டது பஸ். என்ன என்பதுபோல் வெளியில் எட்டிப் பார்த்தான் ராஜன். வஸ் முறிகண்டியில் நின்று கொண்டிருந்தது. நேரம் போனதே தெரியவில்லை. இவ்வளவு தூரம் வந்து விட்டோமா!! ராஜன் தன்க்குள் ஆச்சரியப் பட்டுக் கொண்டான். சற்று நேர அமைதிக்காகவும், தாக சாந்திக்காகவும் மக்கள் இறங்கிக் கொள்கின்றனர். ராஜனுக்கு இறங்க வேண்டும் போல் இல்லை. மனம் பாரமாக இருந்தது. பஸ்சில் இருந்தபடியே லண்டன் குடும்பத்தைப் பார்த்தான். இறங்கி நின்ற பிள்ளைகள் முறிகண்டிப் பிள்ளையார் கோவிலை அதிசயப் பொருள்போல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

உங்களுக்கு இந்தக்கோயிலை தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆனாலும் இது எங்கள் வாழ்வோடும், பயணத்தோடும் பிண்ணிப் பிணைந்து

வெறி வெறி டிபிக்கல்ற் யேணி'' வேதனையுடனும் பெருமூச்சுடனும் கூறிக்கொள்கின்றாள் அரை ஆங்கிலப் பெண்மணி. வந்த செயலுக்காக அவள் வருத்தப்படுவது புரிகின்றது. வஸ் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது நன்றாக இருட்டிவிட்டது நேரம் 8 மணி இருக்கும். இன்னும் அரைமணித்தியாலம் ஆவது செல்லும். ராஜன் மனதில் கணக்கிட்டுக்கொள்கின்றான். ''நாளைக்கு வோட் ஓடுமா?'' அருகில் இருந்தவரை கேள்வியோடு நோக்கினாள் அப்பெண். ''தெரியாதக்கா. சிலவேளை ஓடும்; இரண்டு மூன்று நாளும் செல்லும்'' சாதாரணமாகவே சொல்கின்றார் அருகிலிருந்தவர். ''ஐயோ ரூ, திறி டேயிஸ் செல்லுமா? நாளைக்கே ஓடிட்டிது என்றால் பிரச்சினை இல்லை. நாங்கள் திறி வீக்ஸ் றிற்ரேன் ரிக்கற்றிலதான் வந்தனாங்கள். கெதியாய்ப் போய் விடவேண்டும்.'' மனஆதங்கத்துடன் வெளிப்பட்டது அப்பெண்ணின் வார்த்தைகள். ராஜனுக்கு சிரிப்பைவிட வேதனைதான் மனதை நெருடியது. எங்கள் தேசத்தில் என்ன நடக்கின்றது என்பதே இவர்களுக்கு தெரியவில்லை, புரியவில்லை.

உங்கள் பெற்றோர். அந்தச் சுவடுகள் மறையும் வரை இந்த மண்ணுக்கும், உங்களுக்கும் நீங்கள் விரும்பாத அந்தத் தொடர்பு இருந்துகொண்டேதான் இருக்கபோகிறது. உங்களுக்கு உங்கள் தாயகம், மன்னிக்க வேண்டும்: எங்கள் தாயகம் ஏதோ கூறிக்கொள்ள ஆசைப்படுவது புரிகின்றது. ''இங்கே ஓர் உரிமைப் போர் நடக்கின்றது நிச்சயம் இந்தத் தாயகம் விடியும். அந்தநாள் விரைவில் மிகவிரைவில். அன்று ''எங்களின் தேசம் இது எங்களின் தேசம்'' என்று தமிழினம் தலைநிமிர்த்திக் கொள்ள தமிழீழம் மாத்திரம்தான். அன்றும் நீங்கள் வாருங்கள். உங்கள் பாதச் சுவடுகளை நாங்கள் மகிழ்வுடன் தாங்கிக் கொள்வோம்.'' அவர்கள் செவிமடுப்பார்களா என்ற சந்தேகத்துடனும் தலைநிமிர்த்தி உறுதியுடன் உரைக்கின்றது எங்கள் தாயகம்.

''அன்று இந்த மண்ணில் பதிந்த உங்கள் பாதச் சுவடுகள் இன்றுவரை இல்லை. இல்லை நீங்கள் இறக்கும் வரை .... 'சிரித்துக் கொள்கின்றான் ராஜன். இந்த மண்ணுக்கு அவர்களின் வெறுப்பு புரிந்திருக்க நியாயம் இல்லை.

மௌனமான மனஅமைதியுடன் மெல்லநடந்தான்ராஜன்.

# பொசுனியா

யிலேயே இத்திட்டம் அமைந்துள்ளது. இவ்வாறாக பகைவரால் சூழப்பட்டு நிச்சயமற்ற எதிர்காலத்தைக் கொண்டு அமையப் போகும் இப்பகுதி தொடர்ந்தும் எவ்வித பொருளாதார சமூக வளர்ச்சியின்றி நிவாரண உதவியிலே தங்கியிருக்க வேண்டி வரும் என ஆய்வாளர் கருதுகின்றனர். இவற்றைவிட இன்னுமொரு பெரும் சிக்கலும் நடைபெறப் போகும் பெரும் சனத்தொகையினரின் இடப்பெயர்ச்சி பற்றியதே. இன்று மிகுதியாக இருக்கும் பதினைந்து லட்சம் முசுலிம்களும் ஒரு சிறிய பகுதிக்குள் முடங்கும் போது பெருமளவு சேர்பியரும் குரோசியரும் புதிய இடங்களுக்கு புலம் பெயரவேண்டும். இது பிரித்தானியர் உபகண்டத்திலிருந்து வெளியேறிய போது இந்துக்களும் முசுலிம்களும் பெரியளவில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடம்பெயர்ந்தது போல் இருக்கப் போகிறது. என்றாலும் இங்குபாரிய வேறுபாடு ஒன்றுண்டு. ஒற்றுமையாக ஒன்றாக இருந்த காலத்தில் பெரும் தொகை கலப்பு மணங்கள் சேர்பிய, குரோசியா முசுலிம்களிடையே நடந்தன. இன்று இவர்கள் எதனை தமது தாயகமாக வரித்துக் கொள்வது என்பதில் இவர்கட்கு பெரும் சிக்கல் ஏற்படப் போகின்றது. அதுவுமின்றி புதிய திட்டப்படி

பொசுனியா மூன்று பகுதிகளாக துண்டாடப்பட விருப்பதால் உருவாக்கப்படவிருக்குப் புதிய எல்லைகளில் ஏற்படக் கூடிய மோதல்களை தவிர்க்க பெருமளவு கண்காணிப்பு படைகள் இவ் எல்லைகளில் நிறுத்த வேண்டும்.

இதனை மேற்கொள்ள சருவதேச சமூகம் தயாராக இருக்கிறதா என்பது சந்தேகமே. இவ்வாறாக பலத்த ஐயப்பாடுகள் கிளப்பப்பட்ட போதும் சேர்பியரும் குரோசியரும் இத்திட்டத்தை முசுலிம்கள் ஏற்க வேண்டும் என்பதற்காக புதிய தாக்குதல்களை இப்போது தொடுத்துள்ளனர். குறிப்பாக சேர்பியரோ தமது சரயேவோ நகர 15 மாத கால முற்றுகையை மேலும் இறுக்கி அதன் குரல்வளையை நசுக்கத் தொடங்கிவிட்டனர்.

தினம்தோறும் அதுவும் குறிப்பாக இரவுவேளைகளில் மது வருந்தி வெறிபிடித்த நிலையில் சரயேவோவை சுற்றியுள்ள மலைப் பகுதிகளிலிருந்து சேர்பியர் மேற்கொள்ளும் ஏவுகணைத்தாக்குதல்களின் கொடூரங்களும் அழிவுகளும் எண்ணிப்பார்க்க முடியாதவை. பொசுனியாவில் இத்தனை கொடூரங்கட்கும் காரணமாக உள்ள சேர்பிய (பொசுனியாவில் உள்ள) படைகள் தளபதியான ஜெனரல்

றட்சோ மிலாடிச் (Ratko Mladic) பெரும் கொடுங்கோலன். ஈவுஇரக்கமற்ற தளபதி. 'எனது வேலை அரசியல் கதைப்பது அல்ல. பொசுனியாவில் கணிதபாடம் போல் கூட்டுவது கழிப்பது பெருக்குவது பிரிப்பது'' எனக்கூறும் இவர் தலைமையில் சேர்பிய படைகள் சரயேவோவை அண்மைக்காலமாக மிக நெருக்கத் தொடங்கிவிட்டன. இந்நகரத்தில் உள்ள 3—4 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் 15 மாதகால முற்றுகையின்விளைவாக தமது மன உடல் தாக்குப்பிடிக்கும் வலுவை இழந்து விட்டதாகவும் ஏறத்தாழ 9000 பேர் யூன் மாத நடுப்பகுதி வரை சொல்லப்பட்டு விட்டதாகவும் தெரிகின்றது. இரண்டாம் உலகப் போரின் பின் உலகம் காணாத பெரும் தொகை இறப்புக்களை (mass Death) இந்நகரத்தில் விரைவில் உலகம் சந்திக்கும் என உலக சுகாதார தாபனம் எச்சரிக்கிறது. எனவே வேண்டா வெறுப்பாக வேறு வழியில்லாமல் நேட்டோ அணியும் அமெரிக்காவும் சரயேவோ சுற்றியுள்ள சேர்பியர் நிலைகள்மீது விமானத்தாக்குதல் நடாத்தப்படும் என எச்சரித்தன. ஆனால் உண்மையிலே இத்தாலி பிரான்சு போன்ற நாடுகட்கோ அல்லது

ஐ.நாவிற்கோ விமானத்தாக்குதல் விருப்பமான காரியம் அல்ல. இதனைத் தவிர்ப்பதற்காக ஐ நா சேர்பிய தளபதிகளோடு பேசி அவர்களை வற்புறுத்த 2 வார காலத்திற்கு முன்னிருந்த நிலைகட்கு அவர்களை பின் பார்க்கச் செய்ய செய்துள்ளனர். இதனால் விமானத்தாக்குதல் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. அதேசமயம் சரயேவோ நகரை ஐ.நா கண்காணித்துக்கொண்டுவர கொள்கையளவில் முத்தரப்பினரும் சம்மதித்ததாகக்கூறப்படுகின்றது எனினும் நடைமுறைச்சாத்தியம் பற்றி ஆயிரம் வினாக்கள் உண்டு என ஐ நாவே கூறுகின்றது. இவ்வாறாக முன்னாள் யூகோசிலேவியாவின் இந்நிலைக்குக் காரணம் ''அவர்கள் எதையும் மறக்கவும் இல்லை; எதையும் புதிதாகக் கற்கவும் இல்லை'' என பிரபல ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

சுருக்கின் இன்று இவ்வுலகம் பொசுனிய மக்கள் தம்மைத் தாமே காப்பாற்ற பாதுகாக்க அனுமதிக்கவும் இல்லை. அல்லது தான் முன்வந்து காப்பாற்றவும் இல்லை என்பதே இன்றைய நிலை.

# பிரான்சின்

பழைய குடியேற்றவாசிகள் புதிய குடியேற்றவாசிகளுடன் முரண்படுவதை அடிக்கடி காணலாம். குறிப்பாக பழைய குடியேற்றவாசிகள் புதிதாகக் குடியேறியவர்கள் பற்றிய தகவல்களைத் தரும்போது (முன்பு யூதர் இருந்த இடங்களில்) இங்கே கறுவல், இங்கே பாகிஸ்தானி, அங்கே தமிழன்... என்று எரிச்சலுடன் காழ்ப்புணர்வு பொங்க சுட்டிச்சொல்வதைக் காணலாம்.

ஸார்செலில் வாழ்ந்து பட்டம் பெற்ற அறிவாளிகள், டாக்டர்கள் இன்று இவ்விடத்தை விட்டு அகன்றுள்ளார்கள். இந்த வசதியானவர்கள் ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள உயர் குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் தமது புதிய வாசஸ்தலங்களை அமைக்கின்றனர்.

''நான் 1958இல் இங்கு வந்தபோது. இங்கு வாழ்ந்த மக்கள் மத்தியில் ஒரு கூட்டு ஐக்கியம்காணப்பட்டது. நாம் வாடகை உயர்வுக்கு எதிராகவும், விலைவாசி உயர்வுக்கு எதிராகவும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து போராடினோம். அவ்வேளையில் கம்யூனிஸ்ட் கட்சி வலுவாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது இக்கட்சி வலுவிழந்தே காணப்படுகின்றது'' என்கிறார் ஒருவர் கவலையுடன்.

Beverly Hills எனக் குறிப்பிடும் பகுதியில் அதிக யூதர்கள் வாழ்வதை எரிச்சலுடன் ஆபிரிக்கர் சுட்டிக்காட்டுவர். 'Les Bronx' என்ற பகுதியில் மிகவும் வறுமையில் உள்ளவர்கள் வாழ்கின்றனர். குடும்ப, அரச, இயந்திர சமூக அமைப்பு ஒழுங்குகளுக்கூடாக நெறிப்படாமல் வளர்ந்துள்ள கட்டுப்பாடில்லாத குடியேற்ற வாசிகளின் புதிய தலைமுறையினர் வேலையில்லாத் திண்டாட்டங்களுக்குள்ளாகியுள்ளனர். பொருளாதார நெருக்கடிகளாலும், தாண்டவமாடும் ஏழ்மையாலும் ஒதுக்கப்பட்டு அல்லது ஒதுங்கி வாழும் இவர்கள் தங்களுக்குள்ளாகவே முடங்கி வாழப் பழகி விட்டனர். இந்த முடக்க நிலை ஒரு ஆபத்தான நிலையாகும். மௌனமாகக் குமுறும் இத்தாக்கம் வெடிக்குமாயின் பிரான்சில் தேசிய இனமோதல்களைத் தோற்றுவிக்கலாம் என அரசு நியாயமாகவே பயம் கொண்டுள்ளது. பிரச்சினைகளை அணுக முடியாமல் தனது கையாலாகாத்தனத்தை அரசு உணர்ந்துள்ளது. இதற்குப் பிரதானமாக இரண்டு சமூகப் பிரிவினரின் செயல்கள் காரணங்களாகின்றன.

யூதர்கள்: இவர்கள் 1970-ம் ஆண்டளவில் யூத அரசினால் (இஸ்ரேல் அரசினால்) ஊக்குவிக்கப்பட்டு வறுமையிலிருந்து மேலே வருவதற்குக் கை கொடுக்கப்பட்டார்கள். சுமார் 30 வருடங்களின் பின்பு இவர்களுக்கிடையே நிறையவே பாரம்பரிய மதவேறுபாடுகள். ஆனாலும் இவர்களின் முன்னேற்றம் விரிந்துள்ளது, 'Synagogues, என்ற மதநிறுவனம் இவர்களின் வளர்ச்சிக்கும் ஒன்றிணைப்பிற்கும் துணையாக இருந்துள்ளதெனலாம்.

பிரஞ்சு டிப்பாட்மென்டுகளைச் சேர்ந்த கறுப்பர்கள்: முன்னைய காலங்களில் தமது சமூகக் கொண்டாட்டங்களையும், இசை நிகழ்வுகளையும் பிரஞ்சுடன் கலந்து கொண்டு பிரஞ்சு மக்களுடன் விசுவாசமாக வாழத்தலைப்பட்டவர்கள்.

மேற்படி இரு சமூகத்தவரும் இப்பகுதியிலிருந்து வெளியேறியதால் அரசு நிர்வாகத்தில் ஒரு வெற்றிட வெறுமை தோன்றியுள்ளது. இவர்களே முன்னர் தொடர்பாளர்களாக ஸார்செல் வாசிகளுடனும் அரசு நிர்வாகத்துடனும் இருந்து வந்திருந்தனர்.

ஸார்செலில் இப்போதுவசிப்பவர்களில் ஆபிரிக்க கறுப்பர்களும், 'அந்நியே'யின் இளைய தலைமுறையினரும் தம்மை கறுப்பர்களாக வெளிக்காட்ட விளைவதால் 'கறுப்புத்தோல் இணவாத உணர்வால்' கவரப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# நோபல்பரிசாளரின் தீர்வுத் திட்டமும் சிங்கள அரசாங்கத்தின் புரளிகளும்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டத்தை முன்மொழிந்து, அனைத்துலக கூட்டுறவுக்கான உலக சபை, அண்மையில் தலைவர் பிரபாகரனுக்கும் ஜனாதிபதி விஜயதுங்காவிற்கும் கடிதங்களை அனுப்பிவைத்தது. உலக சபையின சர்வதேச செயலாளர் நாயகம் உட்பட அமெரிக்கா, பிரிட்டன், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் சமாதான நோபல் பரிசுபெற்ற அறிஞர்கள் இந்தத் தீர்வுத் திட்டத்தில் ஒப்பமிட்டிருந்தனர்.

ஐ நா. சபையின் மத்தியத்துவத்தின்கீழ் போர்நிறுத்தத்தை கொண்டுவந்து, வடகிழக்கை சமாதானப் பிரதேசமாக்கி, தமிழர் மனிலத்தில் சமஷ்டி ஆட்சியை நிறுவும் ஐந்து அம்ச யோசனைகள் அடங்கியதாக இத் தீர்வுத் திட்டம் அமைந்துள்ளது. சமாதான நோபல் பரிசு பெற்றோர் அடங்கிய நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடனும், சிறிலங்கா அரசாங்கத்துடனும் இத் தீர்வுத் திட்டம் பற்றி பேச்சுக்களை நடத்த விரும்புவதாகவும் உலக சபையின் செயலாளர் நாயகம் எழுதியிருந்தார்.

இந்தத் தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னரே சிறிலங்கா அரசு அதனை நிராகரித்துவிட்டது. அவசர அவசரமாக இத் திட்டத்தை நிராகரித்தது மட்டுமன்றி தமிழர் பிரச்சினைகுறித்து மிகவும் அபத்தமான, கேலிக்கூத்தான விளக்கம் ஒன்றையும் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. இந்த விளக்கத்தை உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்தால் விஜயதுங்கா அரசின் நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

"இலங்கையின் வடகிழக்கில் நிலவும் வன்செயல் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். அது ஓர் இனப் பிரச்சினை அல்ல. அது துப்பாக்கி கலாசாரத்தை மையமாகக் கொண்ட ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகும்" என்று கூறுகிறது அரசு. இது முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைக்க முயலும் புரளிக் கதையாகும்.

தமிழர் பிரச்சினை ஒரு இனப்பிரச்சினை என்பது உலக சமுதாயமே ஏற்றுக்கொண்ட ஒரு அரசியல் உண்மை. இன ஒடுக்குதலில் தோற்றப்பாடு கண்டு, இன முரண்பாடாக விரிசல் எடுத்து, இனப் பிரச்சினையாக வடிவம்பெற்ற தமிழர் பிரச்சினை ஒரு நீண்ட கொந்தளிப்பான வரலாற்றில் உருவாக்கம்பெற்றது என்பதை உலகம் அறியும். வன்செயல் கோலத்தில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் தோற்றம்கொள்வதற்கு முன்னரே, அதாவது மென்முறைப் போராட்ட யுகத்திலேயே தமிழர் பிரச்சினையானது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய இனப் பிரச்சினையாக வடிவம் எடுத்தது. அரச வன்முறையால் தமிழரின் மென்முறைப்போராட்டம் செயலிழந்து செத்துப்போக புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்றம் கொண்டது ஆயுதப்போராட்டத்தின் வளர்ச்சியும், அகற்சியும் தமிழீழத் தேசிய உருவாக்கத்திற்கு உரமூட்டியதுடன் தமிழரின் இனப் பிரச்சினையை முனைப்புறச்செய்து சர்வதேசமயப்படுத்தியது. இன்று தமிழர் பிரச்சினையை ஒரு இனப் பிரச்சினையாகவே சர்வதேச உலகம் பார்க்கிறது. வரலாற்று நூல்களிலும் அரசியல் மதிப்பாய்வுகளிலும், ராஜதந்திர குறிப்புகளிலும், பத்திரிகை விமர்சனங்களிலும், மனித உரிமைப் பிரகடனங்களிலும் தமிழீழ மக்களின் பிரச்சினை இனப் பிரச்சினையாகவே ஆவணப்படுத்தப்படுகிறது நிலமை இப்படி இருக்கும் பொழுது இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை என விஜயதுங்கா அரசு பகிரங்கப் பிரகடனங்களை வெளியிடுவது மிகவும் கேலிக்கூத்தான அரசியல் பித்தலாட்டமாகும்.

அடக்கு முறையாளரின் அகராதியில் அடக்கப்படுவோரின் விடுதலைப் போராட்டம் "பயங்கரவாதம்" என அழைக்கப்படுகிறது. அரச அடக்கு முறையை நியாயப்படுத்தி, ஒடுக்கப்படுவோரின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்கி விடுவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் இனவாதிகளும் இந்தச் சொற்பதத்தை பாவிப்பது வழக்கம். இதன் பிரகாரம் தென்னாபிரிக்க கறுப்பர்களும், பாலஸ்தீனர்களும், காஷ்மீர் மக்களும். ஈழத் தமிழர்களும் மற்றும் உலகடங்கிலும் உள்ள ஒடுக்கப்படும் மக்கள் அனைவரும் "பயங்கரவாதிகள்" எனப்படுவர். அவர்களது சுதந்திரப் போராட்டங்கள் "பயங்கரவாதம்" எனப்படும். அடக்குமுறையாளர்கள் தமது அடக்குமுறைக் கருவியாக ஆயுத பலாத்காரத்தை பாவிக்கிறார்கள். இந்த ஆயுத பலாத்கார வன்செயல்கள் எல்லாம் "சனநாயகம்" "சட்ட ஒழுங்கு" என்ற கோட்பாடுகள் மூலம் நியாயப்படுத்தப்படுகின்றன. சிறிலங்கா அரசும் இந்த விதண்டாவாதத்தையே முன்வைக்கிறது.

அரச பயங்கரவாத இன ஒழிப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், தமது சொந்தத் தேசத்தில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டவும் தமிழ் மக்கள் ஆயுத மேந்தி நிற்கிறார்கள். இந்த உரிமைப்போராட்டமும் அதன் வெளிப்பாடாகிய ஆயுத எதிர்ப்பு இயக்கமும் சர்வதேச சட்டப்பிரமாணங்களின் பிரகாரம் நியாயமானதே. வாழும் உரிமையும், தாயக உடமைப்பாட்டு உரிமையும் மனிதனின் அடிப்படைஉரிமை என்பதால் இந்த உரிமையை நிலைநாட்ட எந்த வடிவத்திலும் போராடுவது சட்டரீதியானது. நியாயமானது. உலக விடுதலை இயக்கங்களின் ஆயுதப் போராட்டங்களும் இந்த உரிமைப்பாட்டின் அடிப்படையில்தான் நெறிக்கப்பட்டன. இதனை துப்பாக்கி கலாச்சாரம் என்றும், பயங்கரவாதம் என்றும் கொச்சைப்படுத்த முயல்வது அரசியல் அசட்டுத்தனமாகும். தமிழரின் இனப்பிரச்சினையையும், அதனால் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்டத்தையும் உள்நாட்டு வன்செயல் விவகாரமென சிறுமைப்படுத்தி உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட விஜயதுங்கா அரசு முயற்சிக்கின்றது. ஆனால் உலகரங்கில் இந்தப் பொய்ப்பிரச்சாரம் எடுபடப் போவதில்லை. ஏனென்றால் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை அந்தளவிற்கு உலக மயப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழரின் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்ற இன்னொரு விதண்டாவாதத்தையும் சிங்கள அரசு முன்வைக்கிறது. 1983 ஜூலை கலவரத்தை அடுத்து தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சர்வதேசப் பரிமாண அகற்சியைப் பெற்றது இனக்கொலை வடிவத்திலான மனிதஉரிமை மீறல்கள், உலகளாவிய ரீதியில் அகதிகளாக தமிழர்களின் இடம்பெயர்வு, இஸ்ரேலிய ஊடுருவல், இந்திய தலையீடு என்ற வகையில் தமிழர் பிரச்சினை பிராந்திய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் விரிவாக்கம் பெற்றது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தமிழகத்திலும் இந்திய உபகண்டத்திலும் பாரியதாக்கங்களை விளைவிக்கலாமென இந்தியா அஞ்சியதன் விளைவாகவே இந்திய-இலங்கைஒப்பந்தம் உருவாகியது. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை இந்தியாவின்பூகோள-கேந்திர ஆதிக்க அபிலாசைகளுடன் பின்னிப்பிணைந்தது. ஐரோப்பாவிலும், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் தமிழர்களின் இடம்பெயர்வு ஒரு சர்வதேச அகதிப் பிரச்சினையாக தமிழரின் பிரச்சினையை விஸ்பரூப பரிமாணம் பெறச்செய்தது. அத்துடன் தமிழருக்கு எதிரான இன ஒடுக்குதலும் யுத்தமும் பெரும் மனித உரிமை மீறல் பிரச்சினையாக சர்வதேச அரங்குகளில் கண்டனங்களுக்கு உள்ளாகி வருகிறது. அதுமட்டுமன்றி, ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம்என்ற ரீதியில் உலகதேசிய போராட்டங்களில் இணைபிரியாத அங்கமாகவும் தமிழர் பிரச்சினை சர்வதேச முக்கியத்துவம்பெற்றிருக்கிறது. இந்த வகையில் பூகோள விரிவாக்கம் கண்டிருக்கும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை முற்றுமுழுதாக ஓர் உள்நாட்டுப் பிரச்சினையாகவும் அர்த்தமற்ற வன்செயல் விவகாரமாகவும் சிறிலங்கா அரசு சித்தரிக்க முயல்வது சிறுபிள்ளைத்தனமானது.

அனைத்துலக கூட்டுறவுக்கான உலகசபைக்கு சிறிலங்கா எழுதியுள்ள கடிதத்தில் ஏராளமான பொய்களும், புரளிக் கதைகளும் திரித்துவிடப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் "பயங்கரவாத ஆட்சியிலிருந்து" அப்பாவித் தமிழ் மக்களைகாப்பாற்றுவதற்காக அரசாங்கம் தனது அனைத்துவளங்களையும் பிரயோகித்து ஒரு யுத்தத்தை நடத்திக்கொண்டிருப்பதாக ஓர் அபாண்டமான பொய் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் செயலிழந்து கிடக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவும், செத்துப் போன மாகாணசபைத் திட்டமும் தமிழருக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் முயற்சியில்ஈடுபட்டிருப்பதாகவும் இன்னொரு புரளிக்கதையும் கூறப்படுகிறது. இப்படியெல்லாம் பொய்க்குமேல் பொய்யாக கட்டுக்கதைகள் சொல்லி முழு உலகத்திற்கும் ஏமாற்று வித்தை காட்டுகிறது. விஜேதுங்க அரசு சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் புராணக் கதைகளை நோபல்பரிசு பெற்ற வித்தகர்கள் எந்தஅளவிற்கு ஜீரணித்துக் கொள்கிறார்களோதெரியவில்லை. ஆயினும் சிறிலங்கா அரசு ஓர் உண்மை விளக்கத்தை கொடுக்கவில்லை என்பதை நிச்சயமாக உணர்ந்துகொள்வார்கள்.

சமாதான நோபல் பரிசு பெற்றோரின் உலகசபை முன்வைத்த தீர்வுத் திட்டம் புலிகள் இயக்கத்திற்கு சார்பானது என பிரதமர் ரணில் கூறியிருக்கிறார் இப்படியாக அவர் கூறியிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதாவது, இந்த உலகசபை விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழரின் போராட்ட சக்தியாக, தமிழரின் விடுதலை இயக்கமாக அங்கீகரித்திருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டும் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென உலகசபை வலியுறுத்தியிருக்கிறது புலிகள் இயக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென கங்கணம் கட்டி நிற்கும் சிறீலங்கா அரசிற்கு இந்த யோசனை ஆத்திரத்தை மூட்டியிருக்கிறது. இதன் காரணமாகவே விஜதுங்கா அரசு இந்தத் தீர்வுத் திட்டத்தை அவசர அவசரமாக குப்பைத் தொட்டிற்குள் வீசி எறிந்துவிட்டு. ஆயுத கலாச்சாரம் பற்றி தத்துவார்த்தம் பேசியிருக்கிறது, வடகிழக்கு இணைந்த தமிழர் மானிலம் சமஷ்டி போன்ற யோசனைகளும் சிங்களப் பேரினவாதிகளுக்குகொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த யோசனைகளை எல்லாம் ஒரேயடியாக நிராகரித்துவிடும் நோக்கில் தான் இனப்பிரச்சினை என்பதே இங்கு இல்லை என்ற ஒரு இமாலயப் பொய்யை அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது.

தமிழர் பிரச்சினையில் சிங்களப் பேரினவாதம் எத்தகைய அநீதியான கடும்போக்கை கடைப்பிடிக்கிறது என்பதை விஜேதுங்கா அரசின் இந்த நிலைப்பாடு உலக சமுதாயத்திற்கு தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. இந்த நிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் அக்கறையும் அனுதாபமும் கொண்ட உலக சமாதான அமைப்புகள் தமிழரின் தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை ஐ நா. அரங்கில் எழுப்பி, தமிழரின் தாயகத்திற்கும் தேசியத்திற்கும், தன்னாட்சி உரிமைக்கும் சர்வதேச உலகின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதே சாலச் சிறந்த வழியாகும்.

— சாணக்கியன் —

# இளையராஜா தேடிக் கொடுத்த பெருமை

இசையமைப்பாளர் இளையராஜா இசைவடிவம் தீட்...

உலகிலேயே நான்கு சிம்ஃபனி வாத்தியக் குழுக்கள் பிரசித்தி பெற்றவை. லண்டனி...

கையஒருசாதனையை இளையராஜா செய்து முடித்திருப்பது தமிழர்கள் அனைவரும் பெரு...

## இலட்சியத்தோடு

தமிழரின் தேசிய வைத்திய முறை சித்தவைத்தியமாகும். வெடகத்துக்குரிய விடயம், அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாகக்கொழும்பில் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத் தாபனத்திலிருந்து மூலிகைகளிலிருந்து தயாரிக்கும மருந்துகளைப பெற்று வந்தோம். பொருளாதார, போக்குவரத்... ம்பிலிருந்து ஆயுர்வேதமருந்துகளைக் கொண்டுவந்துள்ளார்கள். இதுதுரோகத்தனம்என்று கவலை தெரிவிக்கிறார் டாக்டர் பா. இராதாதேவி.

இங்கிலாந்துப் பொருள்களுக்கு நெப்போலியன் தடைவிதித்திருந்தும் பிரான்சு நாட்டுப் படைகளில் சிலர்இங்கிலாந்துச் சப்பாத்துக்களை அணிந்திருந்...

## நேர்மையுடன்

களோ அதேபோன்ற தியாக உணர்வுடன், பொறுப்புணர்வுடன், பயம் கலந்த எச்சரிக்கை உணர்வுடன் நீங்கள் உங்களது கடமையை செய்ய வேண்டும். கற்றது கைமண் அளவு, கற்காதது உலகளவு என்பார்கள் இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முயலவேண்டும். அனுபவம் ... தமற்றதாகத் தெரியும். ஆனால் மக்களுக்கு அவர்களது பிரச்சினைகள் பூதாகரமாகத் தென்படும் ஆகவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு நீதி வழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். நேர்மையாகவும், உண்மையாகவும் செயல்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்...

கொள்ளலாம்.

''இலங்கையின் வடகிழக்கில் நிலவும் வன்செயல் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். அது ஓர் இனப் பிரச்சினை அல்ல. அது துப்பாக்கி கலாசாரத்தை மையமாகக் கொண்ட ஒரு பயங்கரவாதப்

வரலாற்று நூல்களிலும் அரசியல் மதிப்பாய்வுகளிலும், ராஜதந்திர குறிப்புகளிலும், பத்திரிகை விமர்சனங்களிலும், மனித உரிமைப் பிரகடனங்களிலும் தமிழீழ மக்களின் பிரச்சினை இனப் பிரச்சினையாகவே ஆவணப்படுத்தப்படுகிறது. நிலைமை இப்படி இருக்கும் பொழுது இலங்கையில்

காத்துக்கொள்ளவும், தமது சொந்தத் தேசத்தில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டவும் தமிழ்மக்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். இந்த உரிமைப்போராட்டமும் அதன் வெளிப்பாடாகிய ஆயுத எதிர்ப்பு இயக்கமும் சர்வதேச சட்டப்பிரமாணங்களின்

கள அரசு முன்வைக்கிறது. 1983 ஜூலை கலவரத்தை அடுத்து தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சர்வதேசப் பரிமாண அதற்சியைப் பெற்றது இனக்கொலை வடிவத்திலான மனிதஉரிமை மீறல்கள், உலகளாவிய ரீதியில அகதிகளாக தமிழர்களின் இடம்

மாகவும் தமிழர் பிரச்சினை சர்வதேச முக்கியத்துவம்பெற்றிருக்கிறது. இந்த வகையில் பூகோள விரிவாக்கம் கண்டிருக்கும் தமிழரின் தேசியஇனப் பிரச்சினையை முற்றுமுழுதாக ஓர் உள்நாட்டுப் பிரச்சினையாகவும் அர்த்தமற்ற வன்செயல் விவகாரமாகவும்

சமாதான நோபல் பரிசு பெற்றோரின் உலகசபை முன்வைத்த தீர்வுத்திட்டம் புலிகள் இயக்கத்திற்கு சார்பானது என பிரதமர் ரணில் கூறியிருக்கிறார் இப்படியாக அவர் கூறியிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதாவது, இந்த உலகசபை விடுதலைப் புலி

மைப் பிரச்சினையை ஐ நா. அரங்கில் எழுப்பி, தமிழரின் தாயகத்திற்கும் தேசியத்திற்கும், தன்னாட்சி உரிமைக்கும் சர்வதேச உலகின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதே சாலச் சிறந்த வழியாகும்.

# இளையராஜா தேடிக் கொடுத்த பெருமை

இசையமைப்பாளர் இளையராஜா இசைவடிவம் தீட்டிய ''சிம்ஃபனி'' எனும் மேற்கத்திய சாஸ்திரீய இசை வடிவம் லண்டனில் ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளது. இரண்டு மாதகாலம் எந்தவொரு திரைப் படத்திற்கும் இசையமைக்காது திரையுலகிலிருந்து விலகியிருந்து கேரளாவிலுள்ள திருச்சூரில் மறைவாகத் தங்கியிருந்து இவ் இசை வடிவத்தை இளையராஜா தீட்டியுள்ளார்.

சிலமாதங்களுக்கு முன் கர்நாடக சாஸ்திரீய இசையில் இசைக் கோர்வையொன்றை இளையராஜா ஆக்கியுள்ளார். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஏழு கிருதிகள் படைத்துள்ளார். தற்போது மேற்கத்திய சாஸ்திரீய சங்கீதத்தில் சிம்ஃபனி எனும் இவ் இசை வடிவத்தை ஆக்கியுள்ளார்.

சிம்ஃபனி என்பது இசைக் கருவிகளின் ஒலிகளாலான முழு இசைவடிவம். இதில் பாடல்வரிகள் எதுவும் இராது. இருநூறுக்கு மேற்பட்ட இசைக்கருவிகளின் நாதமும் அதன் ஏற்ற இறக்கமும், லயமும் இணைவும் மனதிலேயே ஒரு இசைக்கலைஞனால் கற்பனை செய்யப்பட்டு இசைவடிவில் வருவது தந்திவாத்தியங்கள், காற்று வாத்தியங்கள், தாளவாத்தியங்கள் போன்ற பலவிதமான கருவிகளின் நுட்பமான இசைகளை மனத்தில் கொண்டு நுணுக்கமாக அமைக்கப்படுவது.

பதினாறாம் நூற்றாண்டில் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக செழுமைப்பட்ட இந்த இசைவடிவத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவந்தார் ஜே ஹன்னஸ் பிரம்ஸ் என்ற ஜேர்மனிய இசையமைப்பாளர். இவர் 1833இல் பிறந்து 1897 வரை வாழ்ந்த இசை மேதை.

உலகிலேயே நான்கு சிம்ஃபனி வாத்தியக்குழுக்கள் பிரசித்தி பெற்றவை. லண்டனிலுள்ள றோயல் ஃபில் ஹார்மனிக் இசைக்குழு. லண்டன் ஃபில் ஹார்மனிக் இசைக்குழு, நியூயோர்க் ஃபில் ஹார்மனிக் இசைக்குழு மற்றும் இஸ்ரேலிலுள்ள இசைக்குழு என்பனவே அவை.

இக்குழுக்களில் றோயல் ஃபில் ஹார்மனிக் இசைக்குழுவே இளையராஜாவின் இசைவடிவத்தை வாசிக்கவுள்ளது. இவ் இசைக்குழு 1813இல் ஆரம்பிக்கப்பட்டது 180 வருடங்களாக புகழ்பெற்று விளங்குகிறது. உலகப்புகழ்பெற்ற திரைப்பட இசையமைப்பாளர் ஜோன் ஸ்கட் என்பவர் இவ் இசைக்குழுவின் இயக்குநராக இருந்து இளையராஜா வடிவமைத்த இசையை லண்டனிலுள்ள பிரமி இன்ரநாஷனல் ஒலிப்பதிவு கூடத்தில் இசைத்தட்டில் பதிவு செய்யவுள்ளார்.

இதுவரை 700 திரைப்படங்களுக்கு மேல் இசையமைத்துவிட்ட இளையராஜா சிம்ஃபனி இசைவடிவம் தயாரித்த முதலாவது ஆசியராவார். இது குறித்து கருத்து வெளியிட்ட இளையராஜா ''எனக்குள் இறைவன் உணர்த்தும் முழு இசையில். நான் அரைகுறை இசையைத்தான் இதுவரையிலும் அமைத்துவருகிறேன். சிந்திக்கும் இசைக்குறிப்புகளை எழுதிவைப்பதற்குள் அவை விரைந்தோடிவிடுகின்றன சிந்திக்கும் குறிப்புகளில் ஓரளவை எழுதிவைத்து அதைத்தான் இசையமைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

மதுரைமாவட்டத்தில் உள்ள பண்ணைபுரம் என்னும் சிறிய கிராமத்தைச் சேர்ந்த தமிழரான இளையராஜா மேற்கத்தியப்பாணி இசையில் ஒரு இசைக்கோவையை உருவாக்கியுள்ளார். மேற்கத்திய இசைமேதைகளின் வரிசையில் இதனால் இவர் இடம் பெறுகிறார். இத்தகையொருசாதனையை இளையராஜா செய்து முடித்திருப்பது தமிழர்கள் அனைவரும் பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

இதேவேளை இசை உலகில் மிகப் பெரிய சாதனை படைத்துள்ள இளையராஜா பற்றி இந்திய அரசு கண்டு கொள்ளவில்லை. இளையராஜாவின் இச்சாதனை பற்றி இந்திய வானொலியோ, இந்திய தொலைக்காட்சியோ வாயே திறக்கவில்லை. இது குறித்து டில்லி மேல் சபையில் தி.மு.க. உறுப்பினர் வை. கோபாலசாமி கண்டனம் வெளியிட்டுள்ளார். இளையராஜா தமிழன் என்பதனால் அவருடைய சாதனையைமூடிமறைப்பதா? அவர் தமிழன் என்பதற்காக இச்செய்தியை மூடிமறைப்பதா? என கேள்வி எழுப்பியுள்ளார். எவ்வாறாயினும் உலகப் புகழ் பெற்றுவிட்ட அவரை இந்தியா எவ்வளவு காலம் மூடி மறைக்க முடியும் என்பது கேள்விக்குரியது.

## இலட்சியத்தோடு

தமிழரின் தேசிய வைத்திய முறை சித்தவைத்தியமாகும். வெட்கத்துக்குரிய விடயம், அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாகக்கொழும்பில் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து மூலிகைகளிலிருந்து தயாரிக்கும மருந்துகளைப பெற்று வந்தோம். பொருளாதார, போக்குவரத்துத்தடை எம்மை விழித்துக் கொள்ளச் செய்தது இந்த மருந்துகளை எமது பிரதேசத்திலேயே சமாளிக்க வேண்டுமென்ற உந்தலால் சித்த மருந்துகளைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். இதற்கான மூலிகை வளமும் சித்த மருத்துவ நிபுணத்துவ வளமும் எம்மண்ணில் உள்ளன. ஆனால் கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் ஏலம், கராம்பு, திற்பலி ஆகியவைகளுக்கு இரட்டிப்பு விலை கொடுத்து வாங்குவதால் எமது மருந்துகளின் விலை சற்று அதிகம். உள்ளூரிலும் சில சித்தவைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் தமக்குத் தேவையான மருந்துகளைச் சிறிய அளவில் தயாரிக்கும்ஒரு மரபும் நெடுங்காலமாக எம்மிடம் உள்ளது. ஆனால், எமது முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவது போல் சிலர் கொழும்பிலிருந்து ஆயுர்வேதமருந்துகளைக் கொண்டுவந்துள்ளார்கள். இதுதுரோகத்தனம் என்று கவலை தெரிவிக்கிறார் டாக்டர் பா. இராதாதேவி.

இங்கிலாந்துப் பொருள்களுக்கு நெப்போலியன் தடைவிதித்திருந்தும் பிரான்சு நாட்டுப் படைகளில் சிலர் இங்கிலாந்துச் சப்பாத்துக்களை அணிந்திருந்தார்களாம்.

''ஆயுர்வேதத்தில் மருந்து செய்வதற்குக்கையாளும்ஆதாரப் பொருளுக்கும் சித்தவைத்தியத்தில் கையாளும் ஆதாரப் பொருள்களுக்கும் வித்தியாசம் உள்ளதா?'' என்று கேட்டபோது -

இதுவரை நாங்கள் தயாரிக்கும் மருந்துகளில் பனை வெல்லத்தையும், பனம் மதுசாரத்தையும் பாவிக்கிறோம். எமது தயாரிப்பான மூலிகைச்சத்துக்கள் பனம் மதுசாரத்தில்தான் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே சித்தவைத்தியம் தனித்துவத்தைப் பேணுவதன்மூலம் எமது கற்பக தருவான பனை வளத்தையும் பாதுகாத்துவருகின்றது. பனை மதுசாரம், பனை வெல்லம் பனம் சீனி உற்பத்தி செய்யும் நிலையங்களிலிருந்து நாம் அவர்களது உற்பத்தியைக் கொள்வனவு செய்து கொள்கிறோம். ஆனால் அவர்கள்-ஆயுர்வேதவைத்தியர்கள் தென்னை மதுசாரத்தையும், கித்துள் வெல்லத்தையும் பாவிக்கிறார்கள் சித்த மருத்துவர் பாவிக்கும் மூலிகைச் செடிகளும், பழவகைகளும் உள்ளூரில் சேகரிக்கப்படுபவைதான்.

''உங்கள் எதிர்காலத்திட்டம் பற்றிச் சொல்வீர்களா?'' என்று கேட்டபோது உற்பத்தி உதவியாளர் செல்வி ராதா முருகேசு பின்வருமாறு கூறுகின்றார்:

விதவிதமான மூலிகைச் செடி, கொடிகள் வளர்க்கப் பண்டத்தரிப்பில் அமைக்கவிருந்த மூலிகைப் பண்ணையை வேறு இடத்தில் அமைக்கலாம் என்று திட்டம். யாழ்ப்பாணத்திலும், சங்கானையிலும் இரண்டு விற்பனை மையங்களை ஏற்படுத்தியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் தற்காலிகமான இடத்தில் இயங்குகிறது. விரைவில் நிரந்தரமான இடத்துக்கு மாற்றப்படவுள்ளது. சிறு இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்துள்ளோம். மின்சாரம் இல்லாத குறை. கூடுமானவரை ஒரு ஜெனரேட்டர் கிடைத்தால் (வாங்கி) போதும். கோபாம் என்ற எமது வியாபாரப் பெயரை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனும், சித்த வைத்தியம் குறித்து சமுதாயப் பிரக்ஞை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நாம் கண்காட்சிகளை கைவிடுவதில்லை. நல்லூர் 93 கண்காட்சியிலும், யாழ். இந்துக் கல்லூரியில் ஜூன் 4 5, 6ஆம் திகதிகளில் நடைபெற்ற கண்காட்சியிலும் எமது உற்பத்திப் பொருள்களை மாத்திரம் அறிமுகம் செய்தோம். பச்சிலைகளையும், மூலிகைகளையும் நாம் காட்சிப்படுத்தவில்லை.

முக்கியமாய் ஒன்று... அந்த வளாகத்தில் மருந்து தயாரிக்கும் விருப்பமான இடங்களுக்கு அன்போடு துணையாக அழைத்துச் சென்றார்கள். பழைய வஸ்திரகாய முறையிலேயே மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. (மூலிகை போன்றவற்றை இடித்துப் பொடியாக்கி மெல்லிய துணியிட்டுச் சலிக்கும் முறை) ஒரு ஜெனரேட்டர் கிடைத்து விட்டால் கூட்டுறவு மருந்துச்சாலை நவீனமயமாகி விடும். கூட்டுறவு மருந்துச்சாலை மருந்துகள்ன் கைபேடு தந்தார்கள். நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டேன்,

## நேர்மையுடன்

களோ அதேபோன்ற தியாக உணர்வுடன், பொறுப்புணர்வுடன், பயம் கலந்த எச்சரிக்கை உணர்வுடன் நீங்கள் உங்களது கடமையை செய்ய வேண்டும். கற்றது கைமண் அளவு, கற்காதது உலகளவு என்பார்கள் இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முயலவேண்டும். அனுபவம் மூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்றால் தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி, சரியான முறையில் நீதி வழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்க தயாராகவுள்ள இலட்சியவாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள். எனவே போராளிகளாகிய நீங்கள் நீதிநிர்வாகத்தை பொறுப்பேற்கும் பொழுது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின்எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நீங்கள் நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன்.

மக்களின் நாளாந்த பிரச்சினைகள், மனித உறவுப் பிரச்சினைகள், முரண்பாடுகள் ஆகியன உங்களுக்கு சிறிய பிரச்சினைகள்போன்று அர்த்தமற்றதாகத் தெரியும். ஆனால் மக்களுக்கு அவர்களது பிரச்சினைகள் பூதாகரமாகத் தென்படும் ஆகவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு நீதி வழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். நேர்மையாகவும், உண்மையாகவும் செயல்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சில சமயங்களில் விமர்சனங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் ஆளாகவேண்டியும் ஏற்படலாம். ஆனால் எப்பொழுதும் நேர்மை தவறாது, சத்தியத்தின் வழியில் நீங்களும் உங்களது கடமையை செய்ய வேண்டும். அதற்கான உறுதியும், துணிவும் உங்களிடம் இருக்கவேண்டும்.

இந்த நிகழ்வில் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம், நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. பரா, காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன், அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு இளம்பரிதி, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் ஆகியோரும் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## பிரான்சின்

பட்டுள்ளனர். பாரம்பரிய ஏழை முஸ்லீம் கறுப்பு இனத்துவ உணர்வால் உந்தப்படுகின்றனர். இவர்களின் வெளிப்பாடுகளாக முன்னர் ஒழுங்கமைக்கப்பட்ட இசைவடிவங்களான பாடல்கள். இப்போது உணர்ச்சிக் கொந்தளிப்பாக ''ராப்'' (Rap) இசையாகக் கொட்டப்படுகின்றன இதனூடாக பிரச்சினைகள் தெருக்களிலேயே வெளியே வீசப்படுகின்றன.

ஒரு பாடசாலையில் கறுப்பு மாணவன் ஒருவனின் வெள்ளைச் சிநேகிதியுடனான தகராற்றில் ஈடுபட்ட மூன்றுகறுப்பர்களுடன் நியாயம் பேசிய கறுப்பு மாணவனை நோக்கி ''நீ கறுப்பனாக இருந்தாலும் ஏன் எம்பக்கமில்லாமல் எதிர்ப் பக்கம் சாய்ந்து பேசுகிறாய்'' எனக்கேட்டு மோதியுள்ளனர்.

முன்னர் வெளிப்படையான நடமாட்டங்களைக் கொண்டிருந்த இனக்குழுக்கள் இப்போது காணப்படவில்லை. ஆனால் சம்பவங்கள் கோரமானவையாக நடக்கின்றன ஆக குழுக்களின் தலைமறைவு நடவடிக்கைகளை ஊகிக்க முடிகிறது புதிய பிரச்சினைகள் வெடிக்க ஆரம்ப அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன.

நன்றி: மாற்றம்

ஈழநாதம்

# ஜனாதிபதி எம். பிகள் மூலம் தெரிவுசெய்ய புதியதிட்டம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து பாராளு மன்றத்தின் மூலம் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்யும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம்கொண்டுவரப் படவுள்ளது. இத்தகைய தீர் மானத்தை அரசாங்கம் எடுத் திருப்பதாக தெரியவந்துள் ளது.

இந்த அரசமைப்பு சட்ட மாற்றத்திற்கு அங்கீகாரமளிக் கப்பட்டால் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற வேண்டிய ஜனாதிபதிதேர்தல் நடைபெறமாட்டாது. பதி லாக 1995 ஆம் ஆண்டு நடை பெறத் திட்டமிடப்பட்டுள்ள பாராளுமன்ற பொதுத் தேர் தலை உத்தேச காலத்திற்கு முன்பே நடத்தவும், தேர்த லில் வெற்றிபெற்று பாராளு மன்றம் வரும் எம். பிகளின் வாக்குகள் மூலம் ஜனாதி பதியை தெரிவுசெய்யவாய்ப்பு ஏற்படும்.

இத் திட்டத்திற்கு முக்கிய இடமளிக்கும் வகையில் அரச மைப்பு சட்டதிருத்த அறிக்கை இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசியலமைப்பு சட்ட அமைச்சு இந்த முயற்சி யில்இப்போதுஇறங்கியுள்ளது.

யாழ் நகர் ஸ்ரீதர் திரை யரங்கில்

'Wild Geese'

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)

## முக்கிய கலந்துரையாடல்

யாழ்நகர் சகலதுறை வர்த்தகர்களுக்கும் ஒரு முக்கிய கலந்துரையாடல் 23-08-93 திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத் தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மிக முக்கிய மான விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் கண்டிப்பாக கலந்துரை யாடலில் கலந்து கொள்ளவும். ஸ்தாபனத்தை விட்டுவர முடியாத வர்த்தக உரிமையாளர்கள் தங்கள் ஸ்தாப னத்தை பூட்டிவிட்டு கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்
யாழ். வர்த்தகர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(5735)

Radio and Electronic Technician Course

காலம் 3 மாதம்

மிகக்குறைந்த கட்டணத் ...

## வீரவணக்க கூட்டம்

வலிகாமம் கோட்டம் யாழ் வட்டத்தில் 7 ஆம், 8 ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக் கக் கூட்டம் இன்று மாலை 7-30 மணிக்கு காங்கேசன் துறை வீதி, வண்ணார் பண்ணை நாச்சிமார் அம்மன் கோவில் வீதியில் இடம்பெற வுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் உறுப்பினர் கள் கலந்துகொண்டு உரை யாற்றவுள்ளனர். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சி யும் இடம்பெறும்.

## ஒளிவீச்சு வெளி வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யூலை மாதம் ஒளிவீச்சு இன்று பல முக்கிய அம்சங்க ளைத் தாங்கி வெளிவந்துள் ளது.

நிதர்சன வெளியீடான ஒளி வீச்சு வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு மற் றும் பொன்நறுவைத் தாக்கு தல்கள் உட்பட மாவீரர் உரு வப்படங்கள், வீரமரண நிகழ் வுகள் ஆகியவற்றுடன் ஆனை யிறவு நினைவாலயத் திறப்பு விழா, சீலன் பூங்கா திறப்பு விழா உட்பட மேலும் பல முக் கிய அம்சங்களை தாங்கி வெளி வந்துள்ளது.

## ஐ. ஐ. தே. மு.-ஐ. தே. க. அடுத்த மாதம் இணைவு?

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் ஆளும் கட்சியுடன் இணையும் என இக்கட்சியின் பேச்சாளர் ஒரு வர் தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆளும் கட்சி எம். பி. களுடன் நடத்திய பேச்சுகளில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பான விடயத்தில் இழுபறிநிலைமைகாணப்படுவ தாக தெரிவிக்கப் படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந் தாலும் நான் மத்திய அரசாங் கத்தில் அமைச்சர் பதவி ஏற்க மாட்டேன். வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவி யையே விரும்புகிறேன் என ஜி. எம். பிரேமச்சந்திரா கூறி வருகிறார்.

வடமத்திய மாகாணசபை முதலமைச்சர் தெரிவு தொடர் பாக தற்போது வழக்கு நடை பெற்று வருவது இங்கு குறிப் பிடத் தக்கது.

## கப்பலில் செல்வோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

'குமண' கப்பல் மூலம் பருத் தித்துறைதுறைமுகத்திலிருந்து திருக்கோணமலை வரை பிர யாணம்செய்வதற்காகவிண்ண ப்பித்துள்ள அனைவரும்நாளை சனிக்கிழமைசர்வதேச செஞ்சி லுவைச்சங்கத்தின்யாழ். பணி மனைக்கு முற்பகல் 8-30மணி ...

தெரிவு செய்யப்பட்டவர்கள் பயண சீட்டுக்களில் கையொப்பமிட்டு தமது பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கேட் டுள்ளது.

'குமண' கப்பல் பருத்தித் துறை துறைமுகத்திலிருந்து எதிர்வரும் 24 ஆம் ...

# போரிற்கு புதிய அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

புலிகளுடனான யுத்தத்தை முறையாக நடத்திச் செல்ல பாதுகாப்புக்கு என ஓர் இரா ஜாங்க அமைச்சரரை ஜனாதி பதி நியமிக்க வேண்டும். ஜனாதிபதி தமக்குள்ள பாரிய பொறுப்புடன் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை யும் கவனிப்பது சிரமமாக இருக்கும் என அவசர காலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டுபேசிய எதிர் கட்சி உறுப்பினர் அநுரத்த ரத்வத்த நேற்றுதெரிவித்தார்.

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சுதந்திரக் கட்சி உறுப்பினர் அனில் முன சிங்க, ஜனகபுர மோதலில் பாதுகாப்புப்படையினர் படு தோல்வி கண்டுள்ளனர். இந் நிலையில் அரசு ராஜினாமா செய்திருக்க வேண்டும். குறை ந்தது பாதுகாப்புக்கு பொறுப் பான அமைச்சராவது ராஜி னாமா செய்தாரா? பிரபாகர னுக்கு யுத்தத்தில் வெல்ல வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. ஆனால் அரசுக்கு இன் னும் அந்த உணர்வு இல்லை. பிரபாகரன் ஆயுதங்களை தயாரிக்கிறார். அரசாங்கமோ பிறநாடுகளிலிருந்து ஆயுதங் களைவாங்குகின்றது ஆயு தங்களை இங்கு தயாரித்தால் கமிஷன் கிடைக்காது என அரசு கருதுகிறதா? என்று வினா எழுப்பினார்.

வடக்கு கிழக்கு 'தமிழர் களின் தாயகம் என்பதை அரசு ஏற்க மறுத்துவருவதால் நாடு நலிவடைகின்றது என வாசுதேவ நாணயக்கார தெரி வித்தார். வடக்கு கிழக்கை தமிழர் தாயகம் என அரசு ஏற்கும் காலம் வரத்தான் செய்யும் என்றும் வாசுதேவ குறிப்பிட்டார். இதற்கு தினேஷ் குணவர்தனா கடும் ஆட்சேபம் தெரிவித்தார். வடக்கு கிழக்கை தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்க முடி யாது. புலிகளுக்கு ஆதரவாக நாணயக்கார பேசியது வெட் கக்கேடு என்று தினேஷ் குண வர்தனா குறிப்பிட்டார்.

பாதுகாப்புப்படையினர் தற்போது புலிகளுக்கு புரோ யிலர்களாகி(இறைச்சிக்கோழி) விட்டனர் என சுதந்திரக்கட்சி எம். பி. சிவி குணரட்ன குற் றஞ் சாட்டினார். புலிகளை நிராயுத பாணிகளாக்கும் போது படையினர் பலியா வதை தடுக்க முடியாது என விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய போது ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

### இராணுவத் தீர்வு

கா. மாணிக்கவாசகர் தெரி வித்துள்ளார்.

கொழும்பில் வைத்து தொலைபேசிமூலம் பி.பி.ஸி க்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் வடபகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆகி யோரின் தேவைகளுடன் ஒப் பிடும் போது மண்ணெண் ணெய் மிகவும் பற்றாக்குறை யாகவுள்ளது. இதனை வட பகுதிக்கு தேவையான அளவு அனுப்பி வைக்கு மாறு கூட்டுப்படைத் தலைமையகத்திடம் தான் கேட்டுள்ளதாகவும் வடபகுதிக் கான தபால் விநியோகம் தற் போது ஓரளவு சீரடைந்துள்ள தாகவும் தெரிவித்த அவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங் கத்தின் சேவையிலுள்ள குமண தவிர்ந்த ஏனைய கப்பல்களி லும்10நாட்களுக்குஒருதடவை வெளியூர் தபால்களை யாழ்ப் பாணம அனுப்பிவைக்க சம்ப ந்தப்பட்ட அதிகாரிகள் இணக் கம் தெரிவித்துள்ளனர். ஆயி னும் இது எவ்வளவு தூரம் ...

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 19-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10639

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
24-0878, 40-0774, 42-2432, 28-6853, 26-1791, 27-6032, 26-0536, 26-7181, 26-7627.

## மரண அறிவித்தல்

நெல்லியடி

### திரு. சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

நெல்லியடி ராணி மில், செல்லம் மில், முள்ளிய வளை உரிமையாளர் சிதம்பரப்பிள்ளை கந்தசாமி அவர் கள் 17-08-1993 இல் செல்லம் மில், முள்ளியவளையில் காலமானார். 18-08-1993 இல் முள்ளியவளையில் அன் னாரது ஈமக்கிரியைகள் இடம்பெற்றன. இவ்வறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
க. கிருஷ்ணகுமார் (சூரியா)
பெறாமகன்
நெல்லியடி,

(5732)

## நினைவில் நிறைந்த 3 ஆண்டுகள்



தவப்புதல்வனாய்: ...

யாழ்நகர் சகலதுறை வர்த்தகர்களுக்கும் ஒரு முக்கிய கலந்துரையாடல் 23-08-93 திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் கண்டிப்பாக கலந்துரையாடலில் கலந்து கொள்ளவும். ஸ்தாபனத்தை விட்டுவர முடியாத வர்த்தக உரிமையாளர்கள் தங்கள் ஸ்தாபனத்தை பூட்டிவிட்டு கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்
யாழ். வர்த்தகர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(5735)

---


**Radio and Electronic Technician Course**

காலம் 3 மாதம்
மிகக்குறைந்த தவணைக் கட்டணம்

- விசேட செய்முறைப் பயிற்சிகள்
- இலகு விரிவுரைகள்
- பயிற்சி முடிவில் தகுதி வாய்ந்த சான்றிதழ்

**ஆரம்பம்: 01-09-1993**

விபரங்கட்கு:
North Ceylon Technical Institute
14, St. Peter's Lane,
Jaffna.

(சி-7224)


---

கட்சியுடன் இணையும் என இக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆளும் கட்சி எம். பி. களுடன் நடத்திய பேச்சுகளில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவி தொடர்பான விடயத்தில் இழுபறிநிலைமைகாணப்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

...மாட்டேன். வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவியையே விரும்புகிறேன் என ஜி. எம். பிரேமச்சந்திரா கூறி வருகிறார்.

வடமத்திய மாகாணசபை முதலமைச்சர் தெரிவு தொடர்பாக தற்போது வழக்கு நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத் தக்கது.

## கப்பலில் செல்வோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைதுறைமுகத்திலிருந்து திருக்கோணமலை வரை பிரயாணம்செய்வதற்காகவிண்ணப்பித்துள்ள அனைவரும்நாளை சனிக்கிழமைசர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின்யாழ். பணிமனைக்கு முற்பகல் 8-30மணிக்கும் பகல் 12 30 மணிக்கும் இடையில் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கப்பலில் பயணத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பயண சீட்டுக்களில் கையொப்பமிட்டு தமது பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது.

'குமண' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து எதிர்வரும் 24ஆம் திகதிதிருக்கோணமலை நோக்கிச் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி).(பா)

## நகரசபை தேர்தல்கள் கிழக்கில் நடத்த ஏற்பாடு

[கொழும்பு]

கிழக்கு மாகாண உள்ளுராட்சி மன்றங்களுக்கும் வவுனியா நகரசபைக்கும் தேர்தல்களை நடத்த அரசுதீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை உள்ளுராட்சிமன்ற, வவுனியா நகரசபை தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்கள் செப்டெம்பர் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை ஏற்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களினதும் உதவித் தேர்தல் ஆணையாளர்களை தேர்தல் ஆணையாளர் கொழும்புக்கு அவசரமாகஅழைத்து தேர்தல்கள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

## சந்திப்பு

பாடசாலைத்தவணை விடுமுறைப் பிரயாண ஒழுங்கு பற்றி வெளிமாவட்ட ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நாளை மு.ப. 10.00 மணிக்கு யாழ் கல்வித்திணைக்கள வளவில் அமைந்துள்ள யா/சாதனபாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலந்துரையாடலில்சகலவெளி மாவட்ட ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

**வீரச்சாவு**

ண்ட் ரட்ணம் / ரட்ணேஸ் (சிறீதர் உமாச்சந்திரன் பிரதான வீதி, மடுவீதி, மன்னார்) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**இராணுவ**

...யேறிய இராணுவத்தினர் தள்ளாடி, வங்காலை முகாம்களுக்கு சென்றுள்ளதாகவும் படையினர் சென்றதையடுத்து அவ்விரு முகாம்களும் மேலும் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடபகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் தேவைகளுடன் ஒப்பிடும் போது மண்ணெண்ணெய் மிகவும் பற்றாக்குறையாகவுள்ளது. இதனை வடபகுதிக்கு தேவையான அளவை அனுப்பி வைக்குமாறு கூட்டுப்படைத் தலைமையகத்திடம் தான் கேட்டுள்ளதாகவும் வடபகுதிக்கான தபால் விநியோகம் தற்போது ஓரளவு சீரடைந்துள்ளதாகவும் தெரிவித்த அவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவையிலுள்ள குமண தவிர்ந்த ஏனைய கப்பல்களிலும்10நாட்களுக்குஒருதடவை வெளியூர் தபால்களை யாழ்ப்பாணம அனுப்பிவைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆயினும் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார்.

**படையினர்**

மேற்கொள்ளப்பட்டது.

இவ்விரு தாக்குதல்களாலும் இராணுவ தரப்பிற்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரிய வரவில்லை.

**நருணுவில்**

டன. பரல்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. இக்கப்பலில் வந்த மண்ணெய் தனியாருக்கே எடுத்துவரப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதேசமயம் இந்த மண்ணெய் பரல்களை தருவித்த தனியார் வர்த்தகர்களை இன்று காலை 10 மணிக்கு செயலகத்தில் புனர்வாழ்வு திட்ட பணிப்பாளரை சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (யோ)

---

## திரு. சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

நெல்லியடி ராணி மில், செல்லம் மில், முள்ளியவளை உரிமையாளர் சிதம்பரப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 17-08-1993 இல் செல்லம் மில், முள்ளியவளையில் காலமானார். 18-08-1993 இல் முள்ளியவளையில் அன்னாரது ஈமக்கிரியைகள் இடம்பெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
க. கிருஷ்ணகுமார் (சூரியா)
பெறாமகன்

நெல்லியடி,

(5732)

---

## நினைவில் நிறைந்த 3 ஆண்டுகள்



தவப்புதல்வனாய்:
12-04-1959

சுவிஸ் நாட்டில் அகாலமாய்:
20-08-1990

## இராசரத்தினம் தவராசா
(பாலன்)

எம் துயர் துடைக்கவென எட்டு ஆண்டுகள்
எமைப் பிரிந்து சென்றீரே வெளிநடு - ஆனால்
எட்டாத துயரில் எமை ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றுற்றீரோ ஐயா.

உமது ஆத்ம சாந்திக்கு இறைவனை
வேண்டி நிற்கும்

அக்கா, அத்தான், மருமக்கள் — இராசரத்தினம் குடும்பத்தினர் (பெற்றார்)

ஏழாலை, ஏழு கோயிலடி. கேணியடி, குப்பிளான்.

(5738)

---

## பதவி வெற்றிடங்கள்

### சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா

யாழ். மாவட்டம்

### பொம்மைவெளி - யாழ்ப்பாணம்

மேற்படி நிலையத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் கடமைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) நிலை:- பராமரிப்பு நிலைய நிர்வாகி

தகைமைகள்:
1. ஓய்வுபெற்ற கணக்காளர், ஆசிரியர் அல்லது நிர்வாக சேவை உத்தியோகத்தர்.
2. (40—50) வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள்.
3. யாழ். நல்லூர்ப் பிரதேசத்திற்குட்பட்டவர்கள் மட்டும்.

2) நிலை:- ஆசிரியை

1. பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி பெற்றவராக அல்லது 2 வருட அனுபவம் உடையவராக இருக்கவேண்டும்.
2. யாழ் நல்லூர் பிரதேசத்திற்குட்பட்டவர்கள் மட்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 25-08-1993


அனுப்ப வேண்டிய முகவரி:- அரசியல்துறை, யாழ். மாவட்டச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள், கோண்டாவில்.

குறிப்பு:-
1. கடித உறை இடது மூலையில் "சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா" வெற்றிடம் எனக் குறிப்பிடவும்.
2. விண்ணப்பதாரிகள் 29 08. 93 காலை 10. 00 மணிக்கு ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொறுப்பாளர்
சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா,
யாழ். மாவட்டம்.

[5718]

---



உ
அமரர்

## கந்தையா செல்லையா
அவர்களின்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்,

22.07.93-ல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா செல்லையா அவர்களின் வீட்டுக்கிருத்தியங்கள் 21.08.93 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற விருப்பதால், அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராக வருகை தந்து அன்னாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

68, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5720)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது